
# ஜாமக்காரன்

WATCHMAN



காவல்காரன்

VOLUME - 2 ISSUE - 5

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,**

**உங்கள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**

**கடந்த மாதம்முதல் அந்நியபாஷை குழப்பம் என்ற தலைப்பில் தவறான உபதேசகுழப்பங்களைக்குறித்து பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள், சபை தலைவர்கள், பிரபல ஊழியர்களிடம் நேரில் சென்றுபேசி சேகரித்த விஷயங்கள் அடிப்படையிலும், அவர்களே தங்கள் கைப்பட எழுதிய கடிதங்களையும், அதில் அவர்கள் அந்த உபதேசத்தைக்குறித்து எழுதிய கருத்துக்களையும் மையமாக வைத்து என் கருத்துக்களை வேத வசன அடிப்படையில் பதிலாக ஒவ்வொரு ஜாமகாரனிலும் எழுத தொடங்கிவிட்டேன்.**

**மொத்தம் ஆறு ஊழியர்களின் கடிதங்களை மட்டும் தெரிந்தெடுத்து அந்த கடிதங்களுக்கு பதில் எழுதி என் கருத்துக்களை வசன ஆதாரத்தோடு எழுதியுள்ளேன். என் கருத்துக்களை எத்தனை பெந்தேகோஸ்தே பாஸ்டர்கள், அவர்கள் சபை விசுவாசிகள் ஏற்றுக்கொள்வார் களோ, சம்மதிப்பார்களோ என்பதை நான் அறியேன்.**

**ஆனால் என் வாசகர்கள் அவர்களின் தவறான உபதேசங்களை பின்பற்றிவிட கூடாதே என்பதற்காகவே இவைகளை ஜாமக்காரனில் வெளியிடுகிறேன்.**

**எத்தனையோ வருடங்களுக்கு முன் தயாரித்த இந்த குறிப்பிட்ட உபதேச விஷயங்களை இப்போதுதான் தொடர்ந்து வெளியிட வாய்ப்பு கிடைத்தது.**

**இதன் காரணமாக கேள்வி-பதில் பகுதி இன்னும் பல ஆவிக்குரிய விஷயங்கள் பிரசங்கங்கள், வேதஆராய்ச்சியும், தியானமும் வாசகர்களின் கடிதமும் வெளியிட ஜாமக்காரனில் இடம்இல்லாமல் அவைகளை நிறுத்தி வைத்திருக்கிறேன்.**

**‘ இந்த ஜாமக்காரன் உங்கள் கையில் கிடைக்கும்போதுமே மாதம் தமிழ்நாடு, பாண்டிசேரி, கேரளா மாநிலங்களில் தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.**

# மே 2016

‘ நீங்கள் எந்த கட்சியை சேர்ந்தவராக இருந்தாலும், எந்த கட்சிக்கு ஓட்டு போட்டிருந்தாலும் தேர்தல் முடிவின்படி யார் ஆட்சிக்கு வருகிறார்களோ, அவர்களுக்காக ஜெபிக்க கடமைப்பட்டிருக்கிறீர்கள். 1 தீமோ 2:1,2 வசனங்கள் அப்படி கூறுகிறது.

‘ கர்த்தர்தாமே நம் தமிழ்நாட்டையும், ஆட்சி செய்பவர்களையும், அதிகாரிகளையும் ஆசீர்வதிப்பாராக. குறிப்பாக இரவும்-பகலும் வீட்டுக்கோ, குடும்ப விசேஷங்களில்கூட கலந்துக் கொள்ளமுடியாதளவு 24 மணி நேரமும் வேலை செய்யும் நம் காவல்துறைக்காக விசேஷமாக ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம்.

‘ மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக எனக்கு காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும், நன்றியையும் அறிவிக்கிறேன்.

‘ ஒவ்வொரு வாரமும் ஏராளமான வாசகர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருகிறது. புதிய வாசகர்களை வரவேற்கிறேன்.

‘ ஜாமக்காரன் வாசக குடும்பத்துக்காக நாங்கள் ஜெபித்தோம். பலருக்கு கர்த்தர் வாசகர்களின் ஆவிக்குரிய தீர்மானத்தின் அடிப்படையிலும் வசனத்துக்கு கீழ்ப்படிந்தாலும் அற்புத சுகத்தை அவர்களுக்கு கர்த்தர் அளித்ததை சாட்சி கடிதங்களின் மூலம் அறிந்தேன். கடிதம் எழுதி அறிவித்தவர்களுக்காகவும் தேவன் அவர்களுக்கு கொடுத்த சுகத்துக்காகவும், அவர்கள் குடும்பத்தில் கர்த்தர் செய்த அற்புதங்களுக்காகவும் தேவனை துதித்தோம். தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். நீங்களும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

‘ உங்கள் பிள்ளைகள் எழுதிய தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறவும், கர்த்தர் பிள்ளைகளை ஆசீர்வதித்து அதன் மூலமாக உங்களுக்கு சமாதானம் உண்டாகவேண்டும் என்றும் நான் ஜெபிக்கிறேன்.

‘ 10,11,12 வகுப்பு பரீட்சை எழுதி பாஸான நம் வாசகர்களின் பிள்ளைகளுக்காக வாழ்த்துதல் கூறுகிறேன். இனி அவர்களின் மேல்படிப்புக்காக ஜெபிப்போம். நீங்களும் ஜெபியுங்கள். தேவ கிருபையும், சமாதானமும் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கர்த்தரின் உன்னத பணியில்

**✍ டாக்டர். புஷ்பராஜ்**

# ஆஸ்ட்ரேலிய ஊழியம்

கர்த்தர் அனுமதித்தால் 2016 கடைசியில் அல்லது 2017 அக்டோபர் மாதம் ஆஸ்ட்ரேலிய ஊழியம் செய்ய திட்டமிட்டிருக்கிறேன். இன்னும் ஆஸ்ட்ரேலிய ஊழிய தேதிகள் உறுதிபடுத்தவில்லை.

# அந்நியபாஷை குழப்பம்

## அத்தியாயம் — 2

**அந்நியபாஷை** பேச ஆசைப்பட்ட என் முதல் அனுபவம். 1964ல் நான் மனந்திரும்புதலின் அனுபவத்தை பெற்றேன். ஒரு வருடம் **டேனிஷ்பேட்டை** பெத்தேல் ஐக்கியத்திலும், **சேலத்திலும்** எனக்கு ஜெபிக்கும் ஐக்கியம் நான்கு அல்லது ஐந்து ஆவிக்குரிய அனுபவம் பெற்றவர்களின் மூலமாக கிடைத்தது.

ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை மாலை பள்ளி கால்பந்து மைதானத்தின் ஓரத்தில் நாங்கள் இணைந்து ஜெபிப்பது வழக்கம். எங்கள் ஐக்கியத்தில் உள்ள இரண்டு பேர்கள் மட்டும் ஜெபிக்கும்போது **அந்நியபாஷை** பேசுவார்கள். நாங்கள் அதை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. ஆனால் எனக்குள் அந்த நண்பர்களிடம் அந்நியபாஷையைப்பற்றி அறியவேண்டும் என்ற ஆசை வந்தது.

ஒருநாள் நான் அதைப்பற்றி கேட்டுவிட்டேன். இது ஒரு தனி அனுபவம் நீங்களும் இதை பெறவேண்டும் என்று ஆசிக்கிறேன் என்றார்கள். ஆனால் நான் அவர்கள் பேசிய அந்நியபாஷைக்கு வேத வசன ஆதாரத்தை கேட்டேன். அதற்கு நேரிடையாக பதில் கூறாமல் நீங்கள் **எங்கள் சபைக்கு வாருங்கள்**. அப்போது நீங்களும் **அந்நியபாஷை** பேசுவதின் இன்பத்தை பெருவீர்கள் என்றனர். உங்கள் சபை எது என்றேன். இலங்கை பெந்தேகோஸ்தே சபை(CPM) என்றனர். இப்போது அந்த சபை (TPM) **The Penticostel Mission** என்று அழைக்கப்படுகிறது.

நானும் அந்த காலத்தில் எப்போதாவது CPM சபைக்கு போவது உண்டு. பல CSI ஆயர்களின் செய்திகளைவிட அந்த சபை பாஸ்டர்களின் செய்தி சுமாராக இருக்கும். அந்த காலத்திலும் சரி-இப்போதும் சரி **கட்டுபாடு**, ஒழுங்கு, பணவிஷயத்தில் நேர்மை, பாஸ்டர்களின் சாட்சி,தியாகம் இவைகள் மற்ற எல்லா **பெந்தேகோஸ்தே சபைகளை** காட்டிலும் சிறந்தது என்பேன்.

ஆனால் அந்த CPM சபையினரை ஆவிக்குரிய தீவிரவாதிகள் எனலாம். குடும்பத்தையே பிரிக்கும் உபதேசம் **புருஷன்-மனைவியை** விவாகரத்து செய்யாமல் வீட்டிலேயே **பிரிந்து வாழும்படி** செய்துவிடுவார்கள். **இரட்சிக்கப்படாத** பெற்றவர்களையும், உறவினர்களையும் CPM சபையின் விசுவாசிகள் நெருக்கவிடாதபடி வாழ உபதேசிப்பார்கள்.

இதே பயங்கர உபதேசம் (LEF) என்ற **Laymen Evangelical Felllowship** என்ற (ஜோ.டேனியல் அவர்களின் சபை) இந்த சபையினருக்கும் உண்டு. இவைகளைக்குறித்து பிறகு விளக்குகிறேன்.

இவர்களின் இப்படிப்பட்ட தறவான சபை உபதேசத்தை அறிந்து அந்த பயத்தின் அடிப்படையில் இந்த CPM சபையோடு அதிகம் நான் நெருங்காதபடி பார்த்துக்கொண்டேன். ஆனால் இந்த அந்நியபாஷை,அபிஷேகம்,அக்கினி அபிஷேகம், பிரதிஷ்டை ஜீவியம் போன்ற இவற்றைக்குறித்து அறிய ஆவல் எனக்கு உண்டு. அதே சமயம் அவர்கள் என்னை **மூளை சலவை** செய்துவிடுவார்களோ என்ற பயமும் எனக்குள் இருந்தது. எப்போதும் CPM சபைக்கு சென்றால் பிரசங்கம் முடிந்தவுடன் வெளியேறிவிடுவேன். அன்று என் நண்பர் அழைத்ததால் பிரசங்கம் முடிந்தவுடன் உடனே வெளியேறாமல் அன்று முழு ஆராதனையும் முடியும்வரை காத்திருந்தேன். ஆராதனை முடிந்தவுடன் எனக்கு பழக்கப்பட்டவர்கள், உறவினர்கள் சிலர், நண்பர்கள் ஆகியவர்களுடன் பேசி முடிந்தவுடன் பாஸ்டரை காண சென்றேன். பாஸ்டர் அவர்கள் என்னை கண்டவுடன் அவரே என்னை நோக்கி ஓடிவந்தார். டாக்டர் எங்கள் சபைக்கு வந்துவிட்டீர்கள் மிகவும் சந்தோஷம். செத்த அந்த CSI சபையை இனி விட்டுவிடுங்கள் என்றார்.

அப்போது நான் அவரிடம் என் ஜெப நண்பர்கள் கூறிய ஆலோசனையின்படி உங்களோடு பேசமட்டும் இன்று இங்கு வந்துள்ளேன். எனக்கு அபிஷேகம் வேண்டும், **அந்நியபாஷை** பேசவேண்டும். அதற்காகவே வந்தேன் என்றேன்.

அப்போது அந்த பாஸ்டர் பரிசுத்த ஆவியானவரின் அந்த அனுபவம் பெறவேண்டும் என்றால் நீங்கள் **சனிக்கிழமை**(டேரிங் மீட்டிங்க்கு) **காத்திருப்பு கூட்டத்துக்கு வரவேண்டும்.** நீங்கள் விரும்பியது உங்களுக்கு அங்கு கிடைக்கும் என்றார். அப்போது நான் ஏன் ஞாயிறு காலை ஆராதனைக்கு ஆவியானவர் வரமாட்டாரா? அந்த அனுபவம் ஞாயிறு ஆராதனையில் கிடைக்காதா? என்றேன்.

அப்படியல்ல, அந்த சனிக்கிழமை காத்திருப்பு கூட்டம் இதுவரை அபிஷேகம் பெறாத வர்களுக்கென்றே நடத்துகிறோம். இது எங்கள் சபையின் ஒழுங்கு என்றார். சரி அவர் கூறியபடி சனிக்கிழமை மாலை காத்திருப்பு கூட்டத்துக்கு போய் பார்ப்போம் என்று தீர்மானித்து என் ஆஸ்பத்திரிக்கு அரைநாள் விடுமுறைவிட்டு CPM சபைக்கு போனேன்.

அந்த காலத்தில் **சேலத்தில்** கோட்டை பெருமாள் கோயில் பின்புறம் ஒரு லேடி டாக்டர் வீட்டில் CPM ஆராதனை நடத்தப்பட்டது. சனிக்கிழமை என் வாகனத்தை CPM சபையின் ஓரத்தில் நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தேன். அங்கு இரண்டு வரிசையில் நிறைய நபர்கள் பெண்களும்,ஆண்களும் ஸ்தோத்திரம்,ஸ்தோத்திரம் என்று கூறிக்கொண்டே கைகளை தட்டி, உடலைக்குலுக்கி கத்திக்கொண்டே இருந்தார்கள். இரண்டு பாஸ்டர்மார் முன்னும் பின்னும் அந்த வரிசையின் ஊடாக நடந்து இந்த **வேகம் போதாது** ஸ்தோத்திரத்தை இன்னும் வேகமாக,ஸ்பீடாக கூறவேண்டும் என்று அவர் சத்தமாக தானும் **அந்நியபாஷை** பேசிக்கொண்டே இப்படியும்,அப்படியும் நடந்துக்கொண்டிருந்தார்கள். ஸ்தோத்திரத்தை இன்னும் வேகப்படுத்தியபோது உடனே சிலர் **த்தத்தோ-த்தத்தோ-தோ-தோ-தோ** என்று

கதறினர். உடனே பாஸ்டர்கள் அவர்களிடம் வந்து அபிஷேகம் கிடைத்துவிட்டது. **பிரைஸ் தி லார்ட்** என்று கூறி அவர்களை வேறு பக்கம் கூட்டி சென்று ஜெபிக்க வைத்தார்.

**அந்நியபாஷை** பேசாத மற்றவர்களிடம் இனி நீங்கள் ஸ்தோத்திரம் சொல்ல வேண்டாம் **இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்று வேகமாக கூறி பாருங்கள் என்றார். அப்படியே **இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்ற வார்த்தையை திரும்ப திரும்ப வேகவேகமாக கூறியபோதோ பலர் உளர ஆரம்பித்தார்கள். நாக்கு குழைய ஆரம்பித்தது. உடனே **பிரைஸ் தி லார்ட்** என்ற பெரிய சத்தத்தில் பாஸ்டர்கள் ஓடிவந்து ஒவ்வொருவர் தலையிலும் கை வைத்து தானும் உளரி அவர்களையும் உளரவைத்து உனக்கு அந்நியபாஷை அபிஷேகம் கிடைத்து விட்டது என்று கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

இது எத்தனை ஏமாற்று வழி - அந்நியபாஷையை கற்றுக்கொடுப்பதை என் வாழ்நாளில் அன்றைக்கு தான் நேரில் கண்டேன். அன்று பலர் உருண்டுபுரண்டு கத்தினார்கள்.

இதை பார்த்த எனக்கு கர்த்தாவே ஆரம்பத்திலேயே இவர்கள் போலிதனத்தை காண கிருபை செய்திரே இந்த பைத்தியக்கார கும்பலிலிருந்து என்னை காப்பாற்றியதற்கு நன்றி என்று கூறி என் வாகனத்தை எடுத்து பிடித்தேன் ஓட்டம்.

இப்படிப்பட்ட கூத்துக்களை நேரில் கண்டபோது அபிஷேகம், அந்நியபாஷை,வல்லமை இவைகளைப்பற்றிய ஆசையே என்னைவிட்டு நீங்கியது.

ஆனால் பிசாசு என்னை விடவில்லை என்றாலும் என் இரட்சிப்பின் அனுபவம் வசனத்தின் அடிப்படையில் கட்டப்பட்டதால் இந்த பிழையான கிரியைகள் என்னை சிரமேற்கொள்ளவில்லை.

காலங்கள் கடந்தது. என் ஊழியத்தில் லட்சக்கணக்கானவர்கள் இயேசுவை கிறிஸ்துவாக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டார்கள். மிகப் பெரிய ஆத்தும அறுவடையை என் ஊழியத்தில் கர்த்தர் தந்தார்.

## அபிஷேகம்,அந்நியபாஷை பெற என் இரண்டாம் கட்ட முயற்சி: சகோ.DGS.தினகரனோடு ஏற்பட்ட நட்பு:

1970ம் வருடம் சகோ.**DGS.தினகரன்** அவர்கள் **மேட்டூர் டேம்** என்ற சிறு ஊரில் State Bank of India(SBI) வங்கியில் Branch Managaer ஆக கோயமுத்தூரிலிருந்து மாற்றலாகி மேட்டூரில் குடியேறினார்.

மேட்டூரில் அன்று இரண்டு பிராட்டஸ்டன்ட் சபைகள் இருந்தன.

1). CIGM - Cylone & India Genaral Mission

2). CSI - Church of South India என்ற சபைகள் இருந்தன. கத்தோலிக்க சபை ஒன்றும் இருந்தது. ஆனால் பெந்தேகோஸ்தே சபைகள் ஒன்றுகூட இல்லை. மேட்டூர் CSI Good Sheperd Churchல் Rev.Royan(Trichy-Tanjore CSI Dioceseன் பிஷப்.சீனிவாசன் அவர்களின் மனைவி Rev.Royan அவர்களின் மகள் ஆவார்.

அப்போது மேட்டூர் CSI சபை கன்வென்ஷனில் பிரசங்கிக்க நான் அழைக்கப்பட்டேன். அன்று சகோ.**DGS.தினகரன்** அந்த CSI சபை கமிட்டியில் பிரசங்கம் செய்யவரும் **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்களை நான் என் வீட்டில் தங்க வைத்துக்கொள்கிறேன் என்று கூறி நான் தங்க ஏற்பாடு செய்தார். நான் டேனிஷ்பேட்டை **பெத்தேல்** கிளினிக் முடித்து **காடையம்பட்டி** என்ற கிராமத்தில் சொந்தமாக ஒரு கிளினிக் தொடங்கியிருந்தேன். அவைகளையும் முடித்து அங்கிருந்து எனது புல்லட்(Royal Enfield) மோட்டார் வாகனத்தில் நேராக **மேட்டூர் டேம்** வந்து சகோ.தினகரன் வீட்டில் குளித்து கன்வென்ஷன் கூட்டத்துக்கு அவர்களின் குடும்பத்தோடு வாடகை காரில் ஆலயத்துக்கு செல்வோம் கூட்டம் முடிந்தவுடன் இரவு சகோ.தினகரன் வீட்டில் தங்கி மறுநாள் காலை சேலம் என் வீட்டுக்கு வராமலே டேனிஷ்பேட்டைக்கு சென்றுவிடுவேன். இப்படித்தான் எங்கள் நட்பு உருவானது. அவர் வீட்டில் தங்கிய நாட்களில் சகோ.தினகரன் அவர்களின் குடும்ப ஜெபத்தில் ஒவ்வொரு இரவும் நானும் இணைந்து கொள்வேன். அவர்களின் ஒவ்வொரு நாள் குடும்ப ஜெபமும் மிக நல்ல அனுபவமாக என் ஆத்துமாவை பெலப்படுத்தக்கூடியதாக இருந்தது. ஆனால் அவர்கள் ஜெபத்தில் சகோ.தினகரன் அவர் மனைவி இருவரும் அந்நியபாஷை பேசுவார்கள். அதோடு சகோ.தினகரனோ ஜெபத்தில் **அந்நியபாஷையில்** பாட்டுபாடுவார். அவருக்கே உரிய தனித்தன்மை கொண்ட குரலில் பாடுவார். பாட்டு விளங்காவிட்டாலும் நான் வெகுவாய் ரசித்தேன். அந்நியபாஷை பாட்டு எனக்கு புதுமையாக இருந்தது.

அவர் **மேட்டூரில்**தான் தன் முதல் ஊழியத்தை தொடங்கினார். அவர் செய்த ஜெபகூட்ட ஊழியத்துக்கு CSI சபையினர் ஆலயத்தில் இடம் கொடுக்க மறுத்தனர். ஆனால் CIGM சபையினர் சகோ.தினகரனுக்கு தங்கள் சபையில் முழு சுதந்திரத்தை கொடுத்து ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைதோறும் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்தனர். தேவநாமம் மகிமைப்பட்டது. **மேட்டூரே** சகோ.தினகரன் ஊழியத்தில் **அசைந்தது.** கத்தோலிக்கர்கள் பலர் வந்தார்கள். கத்தோலிக்க சபையில் பெரும்பாலானவர்கள் சகோ.தினகரன் நடத்திய புதன்கிழமை கூட்டத்துக்கு தவறாமல் கலந்துக்கொண்டனர். மேட்டூர் அருகே குறிச்சி, அம்மாபேட்டை, பவானி, கொளத்தூர்,ஈரோடு ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் ஏராளமான மக்கள் ஒவ்வொரு புதன்கிழமை மாலை நேரத்தில் திருவிழாபோல பஸ் பிரயாணம் செய்து புதன்கூட்டத்தில் வந்து கலந்துகொண்டு போவார்கள். பலருடைய குடும்பங்கள் அப்படியே குடும்பதோடு மனந்திரும்பினார்கள்.

மாதத்தில் இரண்டு **புதன்கிழமைகளில்** நான் பிரசங்கம் செய்வேன். மற்ற இரண்டு புதன்கிழமைகளில் அவர் பேசுவார். அவர் பிரசங்கத்துக்கு ஆட்கள் மிக அதிகம் கூடுவார்கள். கர்த்தர் மேட்டூரில் சகோ.தினகரனின் ஆரம்ப நாட்களில் வசனத்தின்படி அற்புதமான ஊழியத்தை நிறைவேற்றினார்.

## அந்நியபாஷை கற்க பெங்களூர் பயணம்:

❖ இப்படி எனக்கும் சகோ.தினகரனுக்கும் நெருக்கம் அதிகமாக ஒரு நாள் என்னை தொலைபேசியில் அழைத்தார். தன் நண்பர் ஒருவர் **கனடாவிலிருந்து பெங்களூர்** வருவதாகவும் பெரிய அற்புதங்கள் அவர் மூலமாக நடைபெறுவதாகவும், நாம் இருவரும்

**பெங்களூர்** போகலாமா? என்று கேட்டார். பிரசங்கம் கேட்க அவ்வளவு தூரம் போகவேண்டுமா? மேலும் ஆஸ்பத்திரியில் சில முக்கியமான நோயாளிகளை கவனித்துக் கொண்டிருக்கிறேன். அவர்களின் ஆபத்தான கட்டத்தில் அவர்களை விட்டுவிட்டு வர இயலாது என்றேன்.

அப்போதுதான் அவர் எதற்காக என்னை பெங்களூர் அழைக்கிறார் என்பதை விளங்கிக்கொண்டேன். நீங்கள் வெகுநாளாக ஆசைப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் **அந்நியபாஷை அடையாளத்தோடு** கிடைக்கவேண்டும் என்பது எனக்கும், என் மனைவிக்கும் உண்டான பெரும் பாரம் ஆகும். இந்த குறிப்பிட்ட கனடா நாட்டு ஊழியருக்கு ஒரு விசேஷ வரம் உண்டு. இவர் யார் மீது கை வைக்கிறாரோ அவர்களை **அந்நியபாஷை அடையாளத்துடன் ஆவியானவர்** நிரப்புவார் என்றார். எனது நீண்ட நாளைய ஆசை நிச்சயம் நிறைவேறும் என்ற ஆசையில் நானும் பெங்களூர்போக சம்மதித்து சனி,ஞாயிறு இரண்டு நாட்கள் நாம் போவோம் என்றேன். அப்படியே சனி மாலை பெங்களூர் சென்றடைந்தோம். சகோ.தினகரனை பொது கூட்டத்தில் முதன்முதல் அறிமுகப்படுத்தின அவரின் குடும்ப நண்பர் பாஸ்டர்.**K.R.பால்** பெங்களூர் கன்டோன்மென்ட்டில் சபை நடத்துகிறார். அவர் வீட்டுக்கு சென்றோம். அங்கிருந்து கூட்டம் நடக்கும் மைதானதுக்கு சென்று பிரசங்கம் முடிந்தவுடன் அந்த கனடா ஊழியர் தங்கும் ஸ்டார் ஓட்டலில், சனி இரவு 10மணிக்குமேல் ஓட்டலின் மேல்மாடியில் ஊழியர்களின் ஜெபகூட்டம் நடந்துக் கொண்டிருந்தது.அங்கு சகோ.தினகரன்என்னை அழைத்து சென்றார்.கனடா ஊழியரிடம்என்னை அறிமுகம் செய்து வைத்தார். டாக்டர்.புஷ்பராஜ் தென்னிந்திய பிரபல பிரசங்கியார் ஆவார். ஆனால் **அந்நியபாஷை அபிஷேகம்** இவருக்கு இல்லை. இவர் விரும்புகிறார், ஆனால் கிடைக்கவில்லை. நானும் பல பெந்தேகோஸ்தே பாஸ்டர்களான சென்னை பாஸ்டர்.சுந்தரம்,பாஸ்டர்.வாசு, பாஸ்டர்.மத்தியஸ் இன்னும் பிரபல பாஸ்டர்கள் இவர் தலையில் கை வைத்து ஜெபித்தனர். ஆனால் அந்நியபாஷை கிடைக்கவில்லை என்றார்.



நான்,பாஸ்டர்.K.R.பால்,சகோ.தினகரன், திருமதி.ஸ்டெல்லாதினகரன்

உடனே அவர் கை குலுக்கி மற்ற ஊழியர்களுடன் என்னையும் அமரச் செய்தார். 15நிமிடம் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி சுருக்கமாக செய்தி கொடுத்தார். செய்தி முடிந்தவுடன் எல்லாரும் ஜெபிக்கலாம் என்றார். எல்லாரும் முழங்கால் இட்டு ஜெபித்தோம். உடனே கனடா ஊழியர் எல்லாரும் கர்த்தரை வாய் திறந்து துதியுங்கள் என்றார். எல்லாரும் சத்தமாக தோத்திரம் தோத்திரம் என்று சத்தம் உயர்த்தி கூவினார். உடனே கனடா ஊழியர் கூறினார். இப்போது பரிசுத்த ஆவியானவர் இறங்கப்போகிறார். எல்லாரும் அந்நியபாஷையில்

கர்த்தரை துதியுங்கள் என்றார். உடனே அங்கு கூடியிருந்தவர்களின் சத்தம் அதிகமானது சிலர் குதித்தார்கள். சிலர் பாஷைகளை பேசினார்கள். நானோ ஆடாமல் அசையாமல் முழங்காலில் நின்று ஆவியானவரின் அந்த வித்தியாச அனுபவத்தை பெறவேண்டும் என்று ஜெபத்தில் கெஞ்சினேன். ஆனால் அந்த கூட்டத்தில் நான் மட்டும் அந்நியபாஷை பேசவில்லை. அதனால் எனக்கு அழுகை வந்தது. இத்தனை வருடம் ஊழியக்காரனாக கன்வென்ஷன் பிரசங்கியாக பல ஆயிர மக்களை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தினேன். ஆனால் எனக்கு மட்டும் ஏன் பாஷை வரவில்லை?. நான் சோர்வோடு ஜெபிப்பதை பார்த்த கனடா ஊழியர் கலங்காதீர்கள் இப்போது நான் உங்கள் தலைமீது என் கைகளை வைப்பேன் நீங்கள் சத்தமாக பாஷையில் பேச முயலுங்கள் என்று கூறி என் அருகே வந்து என் தலைமீது மட்டும் தன் கைகளை வைத்தார். அவர்தான் நடுங்கினார், பாஷையில் பேசினார். ஆனால் எனக்கு ஒரு அசைவும் நடுக்கமும் வரவில்லை.

உடனே கனடா ஊழியர் தன் கைகளை எடுத்துவிட்டு கூறினார் இதுவரை நான் யார் மீதும் இரண்டாம் முறை கைகளை வைத்ததில்லை. முதல்முறையாக இப்போது உங்கள் தலைமீது இரண்டாம் முறை என் கைகளை வைக்கபோகிறேன். பாஷை பேச நீங்களாக ஒன்று முயற்சி செய்து கஷ்டப்படவேண்டாம். நான் பேசுவதை கவனியுங்கள். நான் பேசுவதைப்போலவே பேச முயலுங்கள் என்று கூறி என் பதிலுக்கு காத்திராமல் உடனே கைகளை வைத்து பாஷைகளைப்போல அவர் எதையோ பேச ஆரம்பித்துவிட்டார். நானோ தாமதமில்லாமல் அவர் கைகளை என் கையால் என் தலையிலிருந்து நீக்கி அவர் கைகளை என் கைகளால் பிடித்து அவரை நோக்கி நீங்கள் கூறுவது Wrong Teaching என்று கூறி எழுந்து நின்றேன். அவர் அதிர்ந்துபோனார். பிறகு சமாளித்து இப்போது நான் எல்லாருக்காகவும் Mass பொது ஜெபம் ஏறெடுக்கப்போகிறேன் என்று கூறி சுருக்கமாக ஜெபித்து முடித்தார். எல்லாரும் அவ்விடத்திலிருந்து கலைந்துபோனார்கள். சகோ.தினகரனை அவர் அழைத்து நீங்கள் அழைத்து வந்த டாக்டரின் இருதயம் மிகவும் கடினம். அவர் இன்னும் உபவாசத்தில் கர்த்தரிடம் காத்திருக்கவேண்டும் என்று கூறி எங்களை வழி அனுப்பினார்.

கனடா ஊழியர் சகோ.தினகரனிடம் என்னை சுட்டிக்காட்டி பேசியது டாக்டர்கள் சில நோயாளிகளைப்பார்த்து இந்த கேஸ் பிழைக்காதுய்யா தூக்கிக்கொண்டு போங்கள் என்று கூறுவதுபோல் இருந்தது.

நானும், சகோ.தினகரனும் அன்று இரவே **திருவள்ளுவர் துரித பஸ் வண்டியில்** சேலம் நோக்கி பயணமானோம். பஸ்ஸில் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சகோ.தினகரனிடம் பிரதர்! இனி யாரும் என் தலையில் கைவைக்க நான் அனுமதிக்கபோவதில்லை. இனி அந்நியபாஷைக்காக என்னை எங்கேயும் என்னை அழைத்து செல்லவேண்டாம். நானும் இனி கர்த்தரிடம் அந்நியபாஷையைப்பற்றி கேட்கப்போவதில்லை. என் ஊழியத்துக்கு **அந்நியபாஷை** அவசியமானால் அவராகவே என்னை பேச வைக்கட்டும். இனிமேல் இதற்காக ஜெபிக்கவே மாட்டேன் என்று கூறினேன். அவரோ பதில் ஏதும் கூறாமல் மௌனமாக தூங்க முயற்சித்துக்கொண்டிருந்தார். இந்த சம்பவத்துக்குபின் **அந்நிய பாஷையைக்குறித்து** யாரிடமும் நான் பேசுவதையே நிறுத்திவிட்டேன்.

# சில வருடங்கள் கடந்தது- குழப்பமான அனுபவம் வந்தது:

சகோ.**DGS.தினகரனுக்கு** மேட்டூரிலிருந்து **சென்னை கிண்டி** அருகே ITI வளாகத்தில் உள்ள SBI- State Bank of India வங்கியில் மேட்டூரிலிருந்து பதவி உயர்வும், மாற்றலும் கிடைத்தது. சென்னை ITI வங்கிக்கு மேல் உள்ள வீட்டில் அவர் குடியேறினார்.

ஊழியத்துக்காக உபவாசிக்க நாங்கள் இருவரும் எங்காவது அடிக்கடி கூடி ஜெபிப்பது வழக்கம். பல முறை **சேலம் ஐந்துரோடு** என்ற இடத்தில் கட்டப்பட்ட **துவாரகா** ஓட்டலில் இணைந்து அடிக்கடி ஜெபிப்போம். அன்று சென்னைக்கு என்னை உபவாச ஜெபத்துக்கு அழைத்திருந்தார். அறையில் நானும், திருமதி.ஸ்டெல்லாதினகரும்,சகோ.தினகரனும் இணைந்து காலையிலிருந்து ஜெபித்துக்கொண்டிருந்தோம். ஜெபம் முடிந்தது. மாலை சிற்றுண்டி முடித்து உபவாச ஜெபத்தை முடித்தோம்.

நான் அவர் வீட்டிலிருந்து புறப்படும்முன் பயணத்துக்காக அறைக்குள் சென்று நாங்கள் மூவரும் சிறு ஜெபம் மட்டும் செய்தோம். அந்த சமயம் அன்றைய பகல் ஜெப தியானத்தில் **சிந்தித்த** சில ஆவிக்குரிய காரியங்களை நான் நினைத்ததாலோ-என்னவோ! நான் வசனத்தின் ஆழத்தின் இன்பத்தை மனதிற்க்குள் அனுபவித்ததாலோ என்னவோ! அந்த பிரயாண நேர ஜெபத்தில் நான் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு என்னமோ ஜெபத்தில் உளறியிருக்கிறேன். அதை கேட்ட சகோதரனும்,சகோதரி ஸ்டெல்லா அவர்களும் மிகவும் சத்தமாக **பிரைஸ் தி லார்ட்,அல்லேலுயா** என்று துதித்தார்கள். சற்றுநேரம் என்ன நடந்தது என்று விளங்கவில்லை. ஜெபம்முடித்து நான் காரில் ஏறும்போது கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நீங்கள் **அபிஷேகிக்கபட்டுவிட்டீர்கள்** என்று சகோ.தினகரன் அவர்கள் என்னிடம் கூறி சந்தோஷத்தோடு வழி அனுப்பினார்கள்.

அந்த காலத்தில் சில இடங்களில் என் சாட்சியில் இந்த குறிப்பிட்ட அனுபவத்தை கூறியிருக்கிறேன். **ஜெர்மனி** தேசத்தில் இலங்கை அகதிகளாக அன்று ஜெர்மனிக்கு வந்த தம்பிமார்களிடமிருந்து என் ஜாமக்காரனை வாங்கி அதை அங்குள்ள **டொச் பாஷை** பேசும் ஜெர்மனி சபை பாஸ்டர்கள் டொச் பாஷையில் மொழி பெயர்த்து தொடர்ந்து அவர்களும் ஜாமக்காரனை வாசித்து வருகிறார்கள். அவர்களுக்கு என்மேல் நல்ல மரியாதையும்,பண விஷயத்தில் நான் நடந்துக்கொள்ளும்முறையை அறிந்து என்மேல் பெரும் மதிப்பும் கொண்டவர்களாகும். அந்த பாஸ்டர்களும்,அவர்கள் சபை மூப்பர்களும் ஒருநாள் இந்தியாவுக்கு அரசாங்க அலுவல் காரணமாக டெல்லி வந்தபோது என்னை நேரில் சந்திக்க விரும்பினார்கள். என்னை சந்திக்கும்போது என் ஊழியத்தைப்பற்றியும்- என் சாட்சியைப்பற்றியும் கேட்டறிந்தார்கள். அவர்கள் என்னை **பேட்டிக்கண்டு** புறப்படும்போது கேட்ட கேள்வி என்னை மிகவும் குழப்பியது. இத்தனை **நல்ல வேத ஞானம்** உள்ள நீங்கள் உங்கள் சாட்சியில் கூறிய சம்பவத்தில் சென்னையில் அந்த குறிப்பிட்ட சகோதரனின் குடும்பத்தோடு ஜெபிக்கும்போது நீங்கள் பேசினது **அந்நியபாஷையா?அந்நிய பாஷையானால்** அதன் அர்த்தம் உங்களுக்கு தெரிந்ததா? உங்கள் சொந்த **தாய் பாஷை**

**யில் கடவுளிடம் பேசினால்** அவருக்கு அது விளங்காதா? **ஆவியானவர்தான் உங்களை பேசவைத்தார்** என்று நீங்கள் கூறுவீர்களோயானால், அவர் ஏன் உங்களுக்காக பேச வேண்டும்?. இந்த கேள்விக்கு நீங்களே ஜெபித்து நீங்களே பதில் பெற்றுக்கொண்டு தெளிவு பெறுங்கள். **வேதத்தில் இல்லாத** எந்த புது அனுபவமும் உங்களில் ஏற்பட்டால் **அதை வெளியே சொல்ல முயலாதீர்கள்** என்ற அற்புதமாக ஆலோசனையை கூறி சென்றுவிட்டார்கள்.

கடைசியாக அவர்கள் கூறியது: நாங்களும் பெந்தேகோஸ்தே சபையை சேர்ந்தவர்கள்தான். ஆனால் வசனத்தின்படி வாழ எங்கள் சபையின் தவறான உபதேசங்களை மட்டும் நாங்கள் விட்டுவிட்டோம் என்றனர். அவர்கள்போனவுடன் **என் குழப்பம்** இன்னும் அதிகமாயின. இரண்டு நாட்கள் என்னால் ஜெபிக்கமுடியவில்லை. சகோ.தினகரன் வீட்டில் அன்று எனக்குண்டான அந்த அனுபவம் என்ன? அது அசுத்தஆவியின் கிரியையா? பரிசுத்த ஆவியானவரின் கிரியையா? அல்லது உணர்ச்சிவசப்பட்ட(Emotional Spirit) கிரியையா? பரவச அனுபவமா? என்றெல்லாம் பெரும் குழப்பத்துக்குள்ளானேன்.

உடனே **ஏற்காடு மலைக்கு** சென்று இரண்டு நாட்கள் ஜெபத்தில் கர்த்தரிடம் விவரம் கேட்டேன். பதில் ஏதும் இல்லை.

அந்த இரண்டு நாட்களும், **அப்போஸ்தல நடபடிகளும்,கொரிந்தியர் நிருபங்களையும்** மனப்பாடம் ஆகுமளவு திரும்பதிரும்ப வாசித்தேன். தியானித்தேன். அதன்பின் வசன அடிப்படையில் என் உள்ளத்தில் உண்டான தெளிவு என் ஜெபத்தில் உண்டான சந்தோஷத்தின் மூலம் உணர்ந்தேன்.

அன்றுதான் முதன்முதல் ஆவியை பகுத்தறியும் Discerning Spirit வரம் எனக்குள் கிரியை செய்ய ஆரம்பித்தது. அதன் பிறகுதான் **பரிசுத்தஆவியானவர்பற்றியும்-அந்நியபாஷையைப்பற்றியும்** ஆவியானவரின் **வரங்களைப்பற்றியும்** தெளிவாக அறியலானேன். அதன்பின்தான் ஊழியர்களைப்பற்றியும், **ஊழியர்கள்** எந்தஆவியினால் நடத்தப்படுகிறார்கள் என்பதைப்பற்றியும், **எந்த உபதேசம் கள்ள உபதேசம்** என்பதையும் குறித்து வெளியரங்கமாக தைரியமாக **குற்றமற்ற மனசாட்சியுடன் பிரசங்கிக்கவும்,எழுதவும்** தொடங்கினேன்.

ஒரு ஊழியனைப்பற்றி அறிய வேண்டுமானால் **அந்த ஊழியனை ஜெபிக்க சொல்லி அவர் ஜெபத்தை கேட்டால்போதும்.** அவர் செய்த ஜெபமே அந்த ஊழியன் எந்த **ஆவியினால்** நடத்தப்படுகிறான் என்பதை தெளிவாக அறிந்துக்கொள்ளமுடியும். அதன்மூலம் அவன் **உண்மையுள்ள** ஊழியனா?- **கபடதாரியா? கள்ளதீர்க்கதரிசியா? கள்ள ஊழியனா?** என்பதெல்லாம் அறிய எனக்குள் உள்ள **அந்நியபாஷை** பேசாத பரிசுத்தஆவியானவர் எனக்கு உதவி செய்தார்.

**இனி அந்நியபாஷையைப்பற்றிய தெளிவான விளக்கத்தை நான் உங்களுக்காக எழுதப்போகிறேன்.**

# அதற்குமுன் -

**அந்நியபாஷையைப்பற்றி** தமிழ்நாடு-கேரளம் ஆகிய மாநிலங்களில் உள்ள பல்வேறு பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களிடம்,**பெந்தேகோஸ்தே சபையை** சார்ந்த பிரசங்கிமார்கள்,ஊழியர்களிடமும்,பெந்தேகோஸ்தேசபை உபதேசத்தையும், அந்நிய பாஷையை முக்கிய அடையாளமாக உபதேசிக்கும் **AOG சபையின்** வேதாகம கல்லூரியின் விரிவுரையாளர்கள், லெக்சரர்கள் **CPM சபை பாஸ்டர்கள்** ஆகியவர்களிடம் நேரிலேயே சென்று பல மணி நேரம் உரையாடி தெரிந்துக்கொண்ட **விவரங்களையும்** நான் அவர்களிடம் எழுதி கொடுத்த கேள்விகளுக்கு அவர்கள் கடிதம்மூலம் எனக்கு எழுதிய பதில்களையும் வாசகர்கள் அறியவேண்டும் என்று 1996ம் வருடமே அந்த கடிதங்களை ஜாமக்காரனில் கொஞ்சம்கொஞ்சமாக வெளியிட்டேன். **அதே கடிதங்களை** புத்தகவடிவில் கொண்டு வரவும், **வாசகர்கள்** அறியவும் தொடர்ந்து **ஜாமக்காரனில்** வெளியிடப்போகிறேன். ஆகவே நான் எழுதப்போகும் கட்டுரையை வாசிக்குமுன் முதலில் **பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள்,ஊழியர்களின்** விளக்கத்தை வாசியுங்கள்.

அதன்பின் கர்த்தர் எனக்குள் உணர்த்திய வசனதெளிவின் அடிப்படையிலும் இப்போதுள்ள **அந்நியபாஷை** பேசும் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களின்,ஊழியர்களின் **சாட்சி கெட்ட ஜீவியத்தின்** மூலமாகவும், அவர்கள் செய்யும் ஊழியத்தில் **மேடையில்** வெளிப்படையாக பேசும் **பொய் சாட்சிகளின்** மூலமாகவும், இவர்களாகவே **பொய் சாட்சி** சொல்ல வைத்த விசுவாசிகளின் உண்மை விளக்கங்களையும், ஆதாரமாக வைத்து **அந்நியபாஷை குழப்பம்** என்ற தலைப்பில் ஆரம்பித்த கட்டுரையை முடிக்கப்போகிறேன்.

வேதத்தை பக்கத்தில் வைத்துக்கொண்டு- அந்த வேதத்தை எழுதிய ஆவியானவரை துணைக்கு அழைத்து ஒவ்வொரு ஊழியர்கள் எழுதிய கடிதங்களையும் வாசித்து, முடிவாக **நான் எழுதும் விளக்கங்களையும்,** ஜெபத்தோடு வாசித்து ஒரு முடிவுக்கு வரும்படி வாசகர்களை கேட்டுக்கொள்கிறேன். தேவ கிருபை உங்களோடு இருப்பதாக.

எந்த ஊழியர்களின் கடிதங்களையும், கூட்டியோ-குறைக்கவோ செய்யாமல் அவர்கள் எழுதியதை அப்படியே வெளியிடுகிறேன்.

**அவர்கள் எழுதிய கடிதத்தை...தொடர்ந்து நீங்கள் வாசிக்கலாம்.**

## THE PENTECOSTAL MISSION

(Regd. under indian Societies Act XXI of 1860 & T.N. Act. 27/975 S.No. 19 of 1963)

**Pastor RAJAN**

“That we may presant Every man perfect in Christ Jesus” (Col. 1:28)

69, Gaudiya Mutt Road,
Royapettah, Madras-14

---

கர்த்தருக்குள் மிகவும் அன்புள்ள டாக்டர் அவர்களுக்கு ஸ்தோத்திரம் கூறி எழுதிக் கொள்வது.

உங்களுடைய பத்திரிக்கை **அந்நிய பாஷை குழப்பம்** என்று எழுதப்பட்டது கிடைக்கப்பெற்றது, உடனே பதில் எழுத முடியவில்லை. மன்னிக்கவும். திறந்த மனதோடும் சுத்த இதயத்தோடும் இவைகளை வாசித்து பார்த்தேன். கீழே என்னுடைய பதில்களை தருகிறேன்.

**பரிசுத்த ஆவியை** காத்திருந்தே பிதாவிடத்தில் கேட்டு பெற்றுக்கொள்ளவேண்டும். (லூக் 11:10, அப். 1:5) இதற்கு மாறாக **ஸ்தோத்திரங்களை வேகமாக சொல்ல** வைப்பதும் **இயேசுவின் இரத்தம்** என்று கூற வைப்பதும் **வேகமான பாடல்களை** தெரிந்தெடுத்து வாத்தியங்களை இதற்கு உதவியாக உபயோகிப்பதும், **Drumமை வேகமாக** அடிப்பதும் பாட்டின் உச்சகட்டத்திற்கு ஜனங்களை கொண்டுசென்று அபிஷேகத்தை பெற்றுக்கொள்ள வைப்பதும் தெய்வீக முறையே அல்ல. அது செயற்கை முறையாகும், இப்படி செய்வது மனிதனுடைய மனதை ஒருமுகப்படுத்துவதற்கும் உற்சாகமூட்டுவதற்குமேயொழிய பரிசுத்தஆவியை பெற்றுக் கொள்வதற்கல்ல. **இதைப்பற்றி நீங்கள் எழுதினது சரியே.**

நாம் இயேசுவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளானபோதே பரிசுத்த ஆவியால் முத்திரைபோடப்படுகிறோம் என்று எழுதியிருந்தீர்கள். எபே. 1:13 வேத வசனத்தில் **ஏற்றுக்கொண்டபோதே** அதாவது அக்கனத்திலே என்று எழுதப்படாமல் **விசுவாசிகளான போது** என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் KJV வேதாகமத்தின்படி After that ye believed என்று ஒரு மனிதனின் இரட்சிப்பை பெற்ற **பிற்பாடு** பெற்றுக்கொள்வதைப்பற்றி எழுதியிருக்கிறது. அதாவது அன்றோ மற்ற நாளோ அல்லது சில காலம் சென்றோ என்று அர்த்தமாகிறது. மேலும் அந்த வசனத்தில் **வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட** ஆவியால் என்று எழுதப்பட்டிருக்கிறது. இதன்படி வேத ஒழுங்கின்படி அப்போஸ்தலர் 2ல் கூறப்பட்டிருக்கும் முறைப்படி முத்திரை போடப்பட்டார்கள். தேவ ஒழுங்கு ஒருபோதும் மாறாது. **இதைகுறித்து நீங்கள் எழுதியது தவறு.**

பரிசுத்த **ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தர்** என்று ஒருவரும் சொல்லக்கூடாது என்று எழுதியிருக்கிறீர்கள். 1 கொரி. 12:3ல் நீங்கள் எழுதியபடி ஒருவன் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள முதலில் பரிசுத்த ஆவியானவரின் கிரியை மிக அவசியமாகும். ஆவியானவரின் கிரியைதான் அவன் இயேசுவை ஏற்றுக்கொள்ள வைக்கிறது. மனந்திரும்ப வைக்கிறது என்பது **சரியே.** இதனால் **இயேசுவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் யாவருக்கும் பரிசுத்த ஆவி உண்டு என்பது தவறு**. இது ஒரு விசுவாச அறிக்கையே (ரோமர் 10:9) இதற்கு யோவான் 14:17 ஆதாரமாகும்.

KJV மேலும் இயேசுவை தம்முடைய சீஷர்கள்மேல் ஊதி பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளுங்கள் என்பது ஆதியிலே தேவன் மனுஷனை பூமியின் மன்னிலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினத்திற்கு அடையாளமாக அதாவது பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மனிதனுடைய ஜீவ சுவாசத்தை போன்றது என்பதாகும். இயேசுவானவர் சீசர்கள்மேல் **தம் ஆவியைத்தான் ஊதினார்.** பரிசுத்த ஆவியை அல்ல. **ஊதினவர்** பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளுங்கள் என்றும் தாங்கள் இனிப்பெற்றுக்கொள்ள வேண்டியதைப் பற்றியே கூறினார் **இதைப்பற்றி நீங்கள் எழுதியது தவறு.** அதனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது **இரண்டாம் அனுபவம் அல்ல** அது ஒன்றே ஆகும்.

4. **அந்நிய பாஷை** பரிசுத்தாவிக்குறிய ஒரே அடையாளம் அல்ல. **முதலாவது அடையாளமாகும். பிதா அருளிய வாக்குத்தத்ததின்படி பரிசுத்தாவியை பெற்று நீங்கள் இப்போது காண்கிறதும், கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்** என்று பேதுரு பேசினாரே. இங்கு **இதைப் பொழிந்தருளினார்** என்பது பரிசுத்தாவி ஆகும். அதாவது **காண்கிறதும் கேட்கிறதுமாகிய** இரண்டு அடையாளங்களுடைய பரிசுத்தாவியை என்பது மாறாத சத்தியமாகும். **அதனால்தான் அந்நிய பாஷை பரிசுத்தாவி பெற்றுக் கொண்டவர்களுக்கு அடையாளம் என்கிறோம்.** மற்றது ஜீவியமாகும். மேலும் காண்பது என்பதற்கு முகப்பிரகாசம் என்று நீங்கள் எழுதியது தவறு. சரீர அனுபவமேயாகும் கூடியிருந்த பல பாஷைக்காரரும் அவர்களுடைய ஒவ்வொருவருடைய முகப்பிரகாசத்ததையும் காணமுடியுமா ? ஸ்தோவானுடைய முகம் பிரகாசித்திருந்தது என்று எழுதியிருந்தீர்கள். சனகரிம் சங்கத்திலே 70 பேருக்கு முன்பாக நிறுத்தப்பட்ட யோவான் அந்நிய பாஷை பேசினதாக நாம் வாசிக்கிறதில்லையே ? காண்பது என்ற பரிசுத்தாவியின் அடையாளம் கேட்பது என்று அனுபவத்தோடே அல்லவா வருகிறது. இங்கு ஸ்தேவானுடைய அனுபவமும் அப் 2ல் சொல்லப்பட்ட அனுபவமும், வேறானவைகள் ஆகும்.

5. அப் 8:16, 17ல் பரிசுத்த ஆவியை பெற்றுகொண்டவர்கள் அந்நிய பாஷை பேசவில்லை என்று நீங்கள் எழுதியது தவறு. பரிசுத்த ஆவியை குறித்த தேவனுடைய ஒழுங்கு ஒருபோதும் மாறாது. மேலும் 8:18ல் பரிசுத்த ஆவி தந்தருளபடுகிறதை சீமோன் கண்டான், ஆனால் அவன் அவர்கள் அந்நிய பாஷை பேசினதை கேட்கவில்லை என்று எழுதியிருந்தீர்கள்.

சீமோனைப்பற்றி எழுதுவதற்கு முன்பாக 17ம் வசனத்தில் அவர்கள் பரிசுத்தாவியை **பெற்றவர்கள்** என்று லூக்கா எழுதினாரே, லூக்காவிற்கு அவர்கள் பரிசுத்த ஆவி பெற்றுக்கொண்டது எப்படி தெரியும்? கண்டவர்கள் சொன்னதினாலல்லவா? கண்டவர்களுக்கு எப்படி தெரியும்? **அந்நிய பாஷையை** கேட்டதினால்தானே மேலும் 20ஆம் வசனத்தில் பேதுரு அவனை நோக்கி தேவனுடைய வரத்தை பணத்தினால் சம்பாதித்துக்கொள்ளலாம் என்று நீ நினைத்தபடியால் என்று ஏன் சொல்லவேண்டும். இங்கு **வரம்** என்று சொல்லப்பட்டது. அந்நிய பாஷையை அடையாளத்தோடுள்ள பரிசுத்தாவிதானே. (அப். 2:4)

6. அப். 2:38, 2:41ல் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்த ஜனங்கள் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்களேயொழிய அவர்கள் பரிசுத்தாவிக்காக காத்திருந்தைதயோ, பெற்றுக்கொண்டதையோ அங்கு நாம் வாசிக்கிறதில்லையே. அவர்கள் ஜெபத்திலே மற்றவர்களோடு தரித்திருந்தார்கள் அவ்வளவே! **இதைப்பற்றி நீங்கள் எழுதியது தவறு.**

7. **அந்நிய பாஷைக**ள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது என்று பவுல் எழுதினது சரியே. எப்படியெனில் **ஒருவன் தனக்கு** தெரிந்த ஹிந்தி பாஷையில் தேவனுடைய மகத்துவங்களை பேசுவானென்றால் **அது அவனுக்கு அந்நிய பாஷையாகும்.** அது அங்கு புதிதாக வந்துள்ள ஹிந்தி தெரிந்த மனிதனுக்கு அது ஆச்சரியமும் அடையாளமாகும். அந்த மனிதன் ஹிந்தியில் பேசும்போது ஹிந்தி தெரியாத விசுவாசிகள் எப்படி அதை விளங்கிக் கொள்வார்கள். இது உண்மையிலே

மற்ற விசுவாசிகளுக்கு ஆச்சரியமும் அடையாளமுமாயிருப்பதில்லையே. விசுவாசிகள் விளங்கிக் கொள்ளவிட்டாலும் அவன் பரிசுத்தாவியைப் பெற்றவன் என்பதை விசுவாசிகள் விளங்கிக் கொள்வார்கள் அல்லவா. அப்படியென்றால் தான் பெற்றுக்கொண்ட இந்த வரம் அவன் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாய் இருக்கிறதே. இதை மனதில் வைத்தே பவுல் கொரிந்தியருக்கு அவ்விதம் எழுதினார். **இதைப்பற்றி நீங்கள் எழுதியது தவறு.**

8. இயேசுவின் **சுவிசேஷம்** அறிவிக்கவே **அந்நிய பாஷை** கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தவறு. பேதுருவும் அப் 2ம் அதிகாரத்தில் அந்நிய பாஷைபெற்ற மனிதன்தான். ஆனால் அவன் அன்று அந்நிய பாஷையில் சுவிசேஷம் அறிவிக்கவில்லையே. வேதத்தில் இதை எங்கும் நாம் காண்கிறதில்லையே. **பாபேலில் சிதறப்பட்ட பாஷைக்காரரை ஒன்றாக்கும்படி தேவன் தந்த வரமே அந்நிய பாஷை என்று நீங்கள் எழுதினது சரியே.** அந்நிய பாஷையில் பேசினார்கள் தேவனுடைய மகத்துவங்களை பேசினார்கள். பேசினவர்களுக்கு தாங்கள் பேசின பாஷையின் அர்த்தத்தை விளங்கவில்லை. அந்தந்த பாஷைக்குரியவர்கள் விளங்கிக் கொண்டவர்கள். இது ஒரு அற்புத அடையாளம் மாத்திரமே. சுவிசேஷம் அறிவிக்கும்படியாய் அல்ல. **சுவிசேஷம் அறிவிப்பதற்கு அபிஷேகமும் சுயசித்தம் அறிவும் ஞானமும் அவசியம்.** ஆனால் அந்நிய பாஷையில் பேசினவர்கள் தங்களுடைய சுயசித்தம் அறிவிற்கு அப்பாற்பட்டே பேசினார்கள். அப்படியில்லையென்றால் சத்தமாக கிரேக்க பாஷை தெரியாதவன் அந்த பாஷையிலே எப்படி பேசியிருப்பான்? இது ஆவியானவருடைய பரிபூரணமான கிரியையாகும். **இதைக் குறித்து நீங்கள் எழுதினது தவறு.**

9. ஒருவன் தன் தாய் பாஷையில் பிரசங்கம் செய்வதோ, ஜெபம் பண்ணுவதோ பாஷை அறியாத மனிதனுக்கு அந்நிய பாஷை என்று நீங்கள் எழுதினது தவறாகும். **அந்நிய பாஷையில் பேசுகிற பாஷை இன்னதென்றே தெரியாது** பேசுகிறான். இதுவே அந்த பாஷைக்குரிய மனிதனுக்கு **அற்புத அடையாளமாகும்.** மற்றபடி அவனுடைய தாய் பாஷை எப்படி அடையாளமாக முடியும். மேலும் கொரிந்து சபையில் சீஷர்கள் ஆராதனை நடத்தினால் அங்குள்ள பல பாஷைக்காரருக்கும் எபிரேய பாஷை அந்நிய பாஷை, அதனால் தான் பரிசுத்த பவுல் அந்நிய பாஷையில் பேசினால் கண்டிப்பாக மொழிபெயர்ப்பு இருக்கவேண்டும் என்று கூறினார். **நீங்கள் எழுதினது தவறு.**

அந்நிய பாஷையில் பேசுகிறவன் சபைக்கு பக்திவிருத்தி உண்டாகும்படி அதன் அர்த்ததை சொல்லாவிட்டால் (1கொரி 14:5) தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன் என்று பவுல் எழுதினாரே. இதன்படி அந்நிய பாஷையில் பேசுகிறவன் பொதுவாக **தேவனோடு பேசினாலும்** மற்றபடி அவன் பேசுவதற்கு **அவனே அதன் அர்த்தத்தை சொல்ல வேண்டும்.** அதாவது தீர்க்கதரிசனம் சொல்லவெண்டும் என்ற அந்நிய பாஷையைக் குறித்த ஒழுங்கை சொல்லுகிறார். இந்த இடத்திலே பிரசங்கத்திற்கோ. ஜெபத்திற்கோ இடமில்லை.

10. **அந்நிய பாஷை** பேசுகிறவனுக்கு அதன் **அர்த்தம்** கண்டிப்பாகத் தெரிய வேண்டும் என்று நீங்கள் எழுதியது தவறு. அப் 2ல் சீஷர்கள் அந்நிய பாஷைகளைப் பேசினபோது அதன் அர்த்தர்தை அவர்கள் விளங்கிக்கொண்டார்களோ இல்லையே. மற்றவர்கள் அல்லவா விளங்கிக்கொண்டு ஆச்சரியப்பட்டார்கள். அந்நியபாஷையில் பேகிறவன் 1கொரி 14:2ன் படி

**மனுஷரோடு பேசாமல் தேவனோடு பேசுகிறான்-இதுவே அவனுடைய ஆத்துமாவிற்கு இளைப்பாறுதலாகும்** (ஏசா 28:11) அவன் இந்த அனுபவத்தில் வளர்ந்து வரும்போது அதன் அர்த்ததை தீர்க்கதரிசனமாக உரைக்கிறான். இது சுயசித்தத்தின் படியல்ல. ஆவியின் சித்தப்படியாகும்.

11. **பரியாச உதடுகளைப்பற்றி** எழுதியிருந்தீர்கள். இவர்கள் யாரை பரிகாசித்தார்களோ அந்த பரிகாசிக்கப்பட்ட பரியாச உதடுகளினால் யுதருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படும். இதுவே தீர்க்கதரிசனம் என்று **நீங்கள் எழுதினது தவறு.சீஷர்களுக்கு** இயேசுவை 30 வருடங்களாகத் தெரியாதே. எப்படி அவர்கள் பரியாசம் பண்ணியிருக்க முடியும். KJV வேதாகமத்தின்படி Stammering Lips என்றே எழுதப்பட்டிருக்கிறதேயொழிய பரியாச உதடுகள் என்றல்ல. இங்கு பரியாசம் என்பதற்கே இடமில்லை அதாவது நீங்கள் ஒரு இடத்தில் எழுதினபடி **திக்கித்திக்கி** பேசுகிற அனுபவமாகும். ஒரு சிறு குழந்தை பேச ஆரம்பிப்பதுபோல். நீங்கள் ஒப்புக் கொள்வீர்களேயானால் இயேசுவைப் பரியாசம் பண்ணித் துன்புறுத்தி சிலுவையில் அறைந்தவர்களைக்கொண்டு அப் 2ன் அனுபவத்தை நிறைவேற்றியிருக்க வேண்டும். அப்படியில்லையே.

12. **பாஷை வரம்** ஆவியானவர் கொடுப்பது. அதை நீ கைதட்டி உனக்குள்ளே பேசி அனுபவிக்க அல்ல என்று **நீங்கள் எழுதினது தவறு.** 1 கொரி 12:7 ன் படி ஆவியினுடைய **அநுக்கிரகம்** அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.

13. **ஆவியின் அபிஷேகம். அக்கினி அபிஷேக**ம் என்பதற்கு **நீங்கள் எழுதியது சரியே.** ஆவியின் அபிஷேகம் வேறு. அக்கினி அபிஷேகம் வேறு என்பது தவறு. **அவர் பரிசுத்த ஆவியானலும். அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்** என்று யோவான் ஸ்நானகன் சொன்னதின் அர்த்தம் பரிசுத்தாவி என்பது ஆவியானவர் ஆள்தத்துவமாய் நமக்குள் வருவதாகும். அக்கினி என்பது அவருடைய வல்லமையாகும். ஆள்தத்துவமுள்ள அதாவது திரித்துவத்தின் **மூன்றாம் ஆவியாகிய** பரிசுத்தாவியானவர் **அக்கினியால்** அதாவது **வல்லமையாய்** நமக்குள் வருவதேயாகும். இது இரண்டு அபிஷேகமல்ல, ஒரே அபிஷேகம் ஆகும்.

14. மேலே குறிப்பிட்ட ஆவி-அக்கினி என்பதை Parallelism என்று **நீங்கள் எழுதியது தவறு.** வேத்தில் பல இடங்களில் முக்கியமாக பழைய ஏற்பாட்டில் இதைக் காண்கிறோம். ஒரு காரியத்தை மிகைப்படுத்திக் கூறும்போது **ஒருபோகும்** நிலை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வேதத்தில் எந்த இடத்திலும் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குக் கட்டளை கொடுத்தபோது இந்த முறை பின்பற்றப்படவேயில்லை. தேவனுடைய கட்டளைகள் தெளிவாயும் தீர்க்கமாயும் சந்தேகத்திற்கு இடமில்லாமலிருக்கிறதே. Born of Water and of the Spirits என்றவர் Born of water the Spirits என்றல்லவா கூறியிருக்க வேண்டும். இங்கு இயேசு ஒருபோகும் நிலையை பின்பற்றவில்லை.

15. **காத்திருப்புக் கூட்டங்களை** பற்றி நீங்கள் எழுதியது தவறாகும்.

ஜனங்களைக் கூட்டி அந்நிய பாஷை பேச வைப்பதல்ல. ஆனால் பரிசுத்தாவியையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ள செய்வதேயாகும். மேலும் **காத்திருப்புக் கூட்டங்களைப்**

**பற்றி வேதாகமத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை என்று நீங்கள் சொல்வது சரியே.** ஆனாலும் ஒருவன் ஒரு நாளை கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்கிறான். (ரோம 14:6). இதிலே தவறு என்ன இருக்கிறது.

16. சபையில் பாஸ்டர் சொல்லி அந்நிய பாஷையில் பேசுகிறீர்கள் என்பது தவறு. கூட்டத்தை நடத்துகிற பாஸ்டர் கூட்டத்தை ஆவியானவருடைய நடத்தின் படியே நடத்துகிறார். எல்லோரும் தொடர்ந்து அந்நிய பாஷை பேசிக்கொண்டேயிருந்தால் எப்போது கூட்டத்தை முடிப்பது. ஆதே ஆவியானவர் விசுவாசிகளுக்குள்ளும் இருக்கிறாரே. நடத்திப்பு தேவனின் முக்கிய ஒழுங்காகும். பாஸ்டருக்குள் இருக்கிற ஆவியானவர் அவர் மூலம் அந்நியபாஷையை நிறுத்த சொல்கிறார். சபை மக்களும் அப்படி நிறுத்திவிடுகிறார்கள். இதில் என்ன தவறு இருக்கிறது?.

நீங்கள் எழுதியபடி **போலியான அந்நிய பாஷைகள் பெருகிவருகிறது.** பலர் பரிசுத்தாவிக்கும் ஜீவியத்திற்கும் முக்கியத்துவம் கொடாது **அந்நிய பாஷைக்கு** முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இதனால் பல ஆயிரங்கள் தவறாக நடத்தப்பட்டு வஞ்சிக்கப்பட்டு கொண்டிருக்கின்றனர். இதனால் அநேகரை அசுத்தாவிகள் பிடிக்கிறது. இது கண்டிக்கப்படவேண்டும். நான் இதை வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இதின் உண்மையான அனுபவங்களுக்கு விரோதமாக எழுதுவதற்கும். பேசுவதற்கும் நாம் பயப்பட வேண்டும்.

தங்கள் சிந்தித்து ஆராயுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பராக.
Pastor Rajan
The Pentecostal Mission
Madras-14.

குறிப்பு : மேலே வாசித்த விமர்சனத்தை எழுதிய பாஸ்டர்.ராஜன் அவர்கள்தான் 1997 ஜீன் மாதம் கர்த்தருக்கள் நித்திரையடைந்தார்.

## சிலோன் பெந்தேகோஸ்தே(TPM)சபை பாஸ்டரின் கடிதத்துக்கு என் பதில்:

TPM சபையிலேயே கன்வென்ஷனில் பேசுவதற்கென்றே சில பாஸ்டர்கள் உண்டு. எல்லா தலைமை பாஸ்டர்களாலும் பாஸ்டர்.ராஜன் அவர்கள் கன்வென்ஷன் செய்தியாளராக அங்கீகரிக்கப்பட்டவர். அந்த வகையில் நல்ல வேத ஞானம் உள்ளவர்தான் **பாஸ்டர்.ராஜன்** அவர்கள்.

இவர் சேலம் TPM சபை பாஸ்டராக ஊழியம் செய்தபோது அடிக்கடி இவர் என் வீட்டுக்கு வருவார். நாங்கள் நல்ல ஆவிக்குரிய நண்பர்களாகவும் இருந்தோம். மேலும் அவருக்கு என்னிடத்தில் மிகுந்த மரியாதை உண்டு. சேலம் விட்டு **நெய்வேலி** TPM சபைக்கு மாற்றலானபோதும் நான் **கடலூர்** போகும் வழியில் என் வாகனத்தில் நெய்வேலி TPM சபைக்கு சென்று ஒருமுறை அவரை சந்தித்து பேசி பயணம் மேற்கொண்டிருக்கிறேன்.

அந்த ஆவிக்குரிய நெருக்கம் எங்கள் இருவருக்குள்ளும் இருந்ததால் பெந்தேகோஸ்தே சபைகளின் பல தவறான உபதேசங்களைக்குறித்தும், தவறான சில ஒழுக்கங்களைக்குறித்தும் நாங்கள் மனம்விட்டு பேசியிருக்கிறோம். அந்த சூழ்நிலையில் **பாஸ்டர்.ராஜன்** அவர்கள் சென்னை தலைமை சபைக்கு மாற்றலானவுடன் **அந்நியபாஷையைப்பற்றிய** விவரங்கள் சேகரிக்க ஒருமுறை சென்னைக்கு நேரில் சந்தித்து பேசினேன்.பலமுறை கடிதங்கள்மூலமாகவும் அந்நியபாஷை விவரங்களை சேகரித்தேன். அவர் கைப்பட எழுதிய கடிதங்கள் பல என்னிடம் இப்போதும் உண்டு. அப்படியே TPM தலைமை பாஸ்டர்களில் ஒருவரான பாஸ்டர்.**பாபின்** அவர்களுடனும் எனக்கு நெருக்கம் உண்டு. என் பாடல்களை அவர் மிகவும் விரும்புவார். காரணம் அவரும் TPM கன்வென்ஷனுக்கு பாடல்கள் இயற்றி ராகம் அமைப்பதில் தாலந்து பெற்றவர்.

**அந்நியபாஷை** விஷயமாக TPM சபை பாஸ்டர்களில் இவர்கள் இரண்டு நபர்களிடம்தான் கூடுதல் ஆலோசனைகளை பெற்றேன். பாஸ்டர். **பாபின்** அவர்களை தூத்துக்குடி TPM சபையில் ஊழியம் செய்தபோதும் பலமுறை நான் தூத்துக்குடிக்கு நேரில் சென்று அவரை பார்த்து பேசி வருவேன். இவர்கள் இருவரும் தங்கள் சபைகளின் வசன அடிப்படையில்லாத பல விஷயங்களை சம்மதித்தாலும் தன்னுடைய சபைக்கென்று உள்ள உபதேசத்தை சற்றேனும் விட்டுக்கொடுக்காமல் பேசினார்கள். தங்கள் சபையை அந்த அளவு அவர்கள் **நேசித்து சபைக்கும்,சபை உபதேசத்துக்கும் உண்மையுள்ளவர்களாக** இருந்தனர்.

**பாஸ்டர்.ராஜன்** அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் பல விஷயங்கள் அவர் என்னிடம் கூறி பல கருத்துக்கள் அவர் தனிப்பட்ட அனுபவங்களில் எனக்கு ஒப்புதல் இல்லை. அந்நியபாஷை விஷயமாக ஜாமக்காரன் பத்திரிக்கைக்காக அவர் எழுதிய முதல் கடிதத்தில் அவரின் **ஆரம்ப கருத்துக்களே** மிக தவறானவையாகும். ஆங்கில அறிவு பெற்ற அவர் **பரிசுத்தஆவியை காத்திருந்ததுதான்** பிதாவினிடத்தில் கேட்டு பெற்றுக்கொள்ளவேண்டும் என்கிறார்.

பரிசுத்த ஆவியானவரை கேட்டு பெற்றுக்கொள்ளும்படி புதிய ஏற்பாட்டு சபைக்கு வேதத்தில் கட்டளையில்லை. இவர் குறிப்பிட்டுள்ள லூாக் 11:10, அப் 1:5 இரண்டும் இவரின் தவறான உபதேசத்துக்கு ஆதாரமாக காட்டுகிறார். இந்த இரண்டு வசனங்களில் ஒன்று இயேசு மரிக்கும்முன் கூறியது. அந்த நாட்களில் **பரிசுத்த ஆவியானவர்** இறங்கி வந்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி போகிறவராக இருந்தார். பிதாவின் வாக்குத்தத்தமான **மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்** என்ற அனுபவம் உலகக்கு அறிமுகப்படுத்தப்படாத காலத்தில் இயேசு கூறியதாகும். ஆகவே தேவையான சமயத்தில் பரிசுத்த ஆவியானவர் கேட்கிற எவனுக்கும் உதவி செய்ய பிதா ஏற்பாடு செய்திருந்தார்.

அப் 1:5ல் பிதாவால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டதும் இயேசுவால் யோ 14:16ல் என்றென்றும் நம்மோடு,நமக்குள் **தங்கும்** திட்டத்துக்காக **மேல்அறையில்** காத்திருக்கும்படி கூறினார். அதுவரை **பரிசுத்தஆவியானவரின்** முதல் இறக்கம் நடைபெறவில்லை என்பதை கவனிக்கவேண்டும்.

அந்த முதல் இறக்கத்துக்காகவும் யோ 14:16ல் இயேசு கூறியதை **நிறைவேற்றுவதற்காகவும் காத்திருக்கும்படி** கூறினார். சீஷர்கள் கீழ்ப்படிந்தனர், காத்திருந்தனர். வாக்கு மாறாத தேவன் பரிசுத்தஆவியானவரை காத்திருந்த அவர்கள்மேல் அருளினார். அப்படி வந்து இறங்கிய பரிசுத்தஆவியானவர் பழைய ஏற்பாட்டின் காலத்தில் நடந்ததுபோல திரும்ப போகவில்லை. அப் 1:5 வசனத்தில் காணப்படும் இந்த **காத்திருப்பை** மனதில்கொண்டு ஒவ்வொரு **சனிக்கிழமை மாலையும்** ஆவியானவருக்காக காத்திருப்பது என்பது அர்த்தம் இல்லாததாகும். இது மிகவும் தவறான உபதேசமாகும். இந்த உபதேசத்தை TPM சபையைபோல் வேறு எந்த பெந்தேகோஸ்தே சபையினரும் பின்புற்றுவதில்லை என்பதையும் கவனிகக்வேண்டும்.

சீஷர்கள் யாரும் **பரிசுத்தஆவியானவரை** அழைக்கவில்லை. அப்படி அழைத்ததாக வேதத்தில் யாராவது காட்டமுடியுமா?. இதுதான் TPM சபையின் முதல் பிழையான உபதேசமாகும். இந்த **காத்திருப்பில்** தான் பிழையான **செயற்கை பாஷைகள்** படிப்பிக்கபடுகின்றன. இங்கு பாஷைகளை கற்று ஞாயிறு ஆராதனையில் அந்நியபாஷையில் துதிக்கவேண்டும் . சபை முழுவதும் இதன் மூலம் தவறான வழியில் நடத்தப்படுகிறது. கற்று ஞாயிறு ஆராதனையில் **அந்நியபாஷையில்** துதிக்க வேண்டும். சபை முழுவதும் இதன் மூலம் தவறான வழியில் நடத்தப்படுகிறது.

ஆகவே பரிசுத்த ஆவியானவரை காத்திருந்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறிய **பாஸ்டர்.ராஜன்** அவர்களின் கருத்து மிகவும் பிழையானது. மட்டுமல்ல வேத வசனத்துக்கு முரணானது.

**காத்திருக்கவேண்டும்** என்ற வார்த்தை எப்போது கூறப்பட்டது. எந்த சூழ்நிலையில் கூறப்பட்டது. அந்த முதல் காத்திருந்த அனுபவத்திற்கு பிறகு புதிய ஏற்பாடு முழுவதிலும் வேறு எங்காவது சீஷர்களோ புதிய ஏற்பாட்டு சபை மக்களோ **பரிசுத்தஆவியானவரின்** வருகைக்கு **காத்திருந்ததாக** எழுதப்பட்டுள்ளதா? அப்போஸ்தலர் முதல் அதிகாரத்தில் காணப்டும் அந்த முதல் ஆவியானவரின் இரகத்துக்குபின் யாராவது எங்காவது **காத்திருந்ததாக** ஆதாரம் உண்டா? இதை வாசிக்கும் TPM பாஸ்டர்கள் விசுவாசிகள் பதில் கூறமுடியுமா? எழுதுங்கள். ஜாமக்காரனில் வெளியிடுகிறேன்.

பாஸ்டர்.**ராஜன்** அவர்களின் கடிதத்தில் எழுதிய ஒப்புதல் வாக்குமூலம்.

❖ பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ள **ஸ்தோத்திரங்களை** வேகமாக சொல்ல வைப்பது.

❖ **இயேசுவின் இரத்தம்** என்ற வார்த்தையை வேகமாக கூற வைப்பதும் **வேகமாக பாடும்** பாடல்களை தெரிந்தெடுத்து அந்த வேகத்தை உற்சாகப்படுத்த **வாத்தியங்களை** இதற்கு உதவியாக உபயோகிப்பதும்,

(Drum)**டிரம்மை வேகவேகமாக** அடித்து **உற்சாகத்தை தூண்டிவிடுவதும்** பாடும்பாட்டின் **உச்சக்கட்டத்திற்கு** ஜனங்களை கொண்டு சென்று அபிஷேகத்தையும் அந்நியபாஷையையும் பெற்றுக்கொள்ள வைப்பதும் **தெய்வீகமுறையே அல்ல**- அது செயற்கை முறையாகும் என்று எழுதியிருக்கிறார்.

**இதைப்பற்றி நீங்கள் எழுதியது சரியே? என்றும் சம்மதித்திருக்கிறார்.**

பாஸ்டர் கடிதத்தில் எழுதியது மட்டுமல்ல, என்னோடு நேரில் பேசும்போதும் இது என் சபையில் மட்டுமல்ல, எல்லா பெந்தேகோஸ்தே சபைகளிலும் இந்த **சத்தங்கள்** கூச்சல்கள் மிகுதியாக காணப்படுகிறது. இதற்கு காரணம் **எங்கள் சபை மக்கள் அப்படியே** பழகிவிட்டார்கள். என்ன செய்ய? என்றார்.

**ஜாமக்காரன்:** இன்று பெந்தேகோஸ்தே சபைகளில் மட்டுமல்ல, CSI சபைகளிலும் இப்போதெல்லாம் புது டிரண்ட் Prasing Worship **துதி ஆராதனை** என்ற பெயரில் பல பாடல்களை எழுந்து நிற்க வைத்து பாடுகிறார்கள். இது தவறல்ல. ஆனால் இது பெந்தேகோஸ்தே சபையினரை காப்பி அடிப்பதுபோல் காணப்படுகிறதே!. வேகமாக பாடும் பாட்டு தெரிந்தெடுப்பது, **அல்லேலுயா** சத்தம் **ஆமென் ஆமென்** என்ற சத்தம். இவைகள் யாவும் பல CSI கன்வென்ஷன்களில் காணப்படுகிறது. இது ஜனங்களை பரவச உணர்ச்சியின் உச்சக்கட்டத்துக்கு மக்களை கூட்டி செல்கிறது.

சபைகளில் இப்படியாவது நம் ஜனங்களை உற்சாகப்படுத்தி **அல்லேலுயா** சத்தமாக கூற வைத்தால் ஜனங்கள் பெந்தேகோஸ்தே சபைகளுக்கு போகாமல் தடுத்துவிடலாம் என்று தப்பு கணக்கு போடுகிறார்கள். **துதி பாடலுக்கு** அதிக நேரமும் **பிரசங்கத்துக்கு** சில நிமிடங்கள் என்று ஆராதனை முறைமைகளை மாற்றிக்கொண்டுவருகிறார்கள். **துதி பாடலுக்கு நான் எதிரியல்ல.** நானே **துதி** பாடல் நடத்துகிறேன். ஆனால் எல்லாவற்றையும் ஒழுங்கும் கிரமுமாக ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டால் நம் ஆராதனை சிறப்பாக அமையும்.

**(இதன் தொடர்ச்சி அடுத்த ஜாமக்காரனில் வெளிவரும்...)**

# முக்கிய அறிவிப்பு:

‘ என்னோடு **தொலைபேசியில்** தொடர்புக்கொள்ள முடியாதவர்கள், **கடிதங்கள்**மூலம் ஜெபகுறிப்புகளையும், குடும்ப பிரச்சனைகளையும் அனுப்பலாம்.

‘ இ-மெயில் மூலம் நீங்கள் எனக்கு எழுதினாலும் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் தயவுசெய்து குறிப்பிட்டால், கடிதம்மூலமாக பதில் எழுத இயலும். வாரம் இரண்டு நாட்கள்மட்டும் வீட்டில் நான் இருப்பதால் நீங்கள் அனுப்பும் இ- மெயில்க்கு கடிதம்மூலம் என் பிராயணத்தில் உடனே பதில் எழுதமுடியும். அதனால் இ-மெயில் அனுப்புபவர்கள் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் அனுப்புங்கள்.

## காணிக்கை

**சில வாசகர்கள் ஜாமக்காரன் பத்திரிக்கைக்காக காணிக்கை அனுப்பினேன் நீங்கள் பத்திரிக்கை அனுப்பவில்லை** என்று எழுதுகிறார்கள். மணியாடரில் நீங்கள் காணிக்கை அனுப்பும்போது எதற்காக அந்த பணம் அனுப்பினீர்கள் என்பது நீங்கள் எழுதமுடியாது. எனக்கு காரணமும் தெரியாது. ஆகவே பணம் அனுப்பிய உடன் ஒரு கடிதத்தில் உங்கள் முழு விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் எழுதி எனக்கு பத்திரிக்கை அனுப்பவும் என்று அறிவிக்கவும். புதிய வாசகர்களாக இருந்தால் நான் புதிய வாசகர் என்று எழுதவும். நன்றி.

# இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று சொல்லலாமா?

இப்போதெல்லாம் எதற்கெடுத்தாலும் **இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்ற வார்த்தையை உபயோகிக்கிறார்கள். **இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்ற **வார்த்தைக்கு** அத்தனை பெரிய வல்லமை இருக்கிறதாக நிறைய கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்.

இப்படி நான் எழுதியவுடன் சிலர் டாக்டர்.புஷ்பராஜ் அவர்கள் **கிறிஸ்தவத்தையும், இயேசு சிந்திய இரத்தத்தையும் மறுதலிக்கிறார்** என்று முத்திரை குத்த காத்திருக்கிறார்கள்.

பரிசுத்தஆவியின் நிறைவுக்கு **அந்நியபாஷை பேசுவது அடையாளம் அல்ல** என்று எழுதினேன். பிரசங்கித்தேன். உடனே மோகன். சி.லாசரஸ்,சாம் ஜெபதுரை, ஏஞ்சல் டிவியில் பொய் பேசும் கூட்டணிகள் டாக்டர்.புஷ்பராஜ்க்கு குற்றம் கூறும் ஆவி இருக்கிறது. பரிசுத்த ஆவியானவருக்கு பதில் பிசாசின் ஆவியில் அகப்பட்டிருக்கிறார் என்றெல்லாம் முத்திரை குத்தி உபவாச கூட்டத்திலும், மற்ற கூட்டங்களிலும் பேச ஆரம்பித்தார்கள்.

அதை மக்கள் நம்பும் வண்ணமாக என் ஜாமக்காரன் பத்திரிக்கையின் நோக்கமே வாசகர்களை இப்படிப்பட்ட பொய் ஊழியர்களிடமிருந்து காப்பாற்றுவதும், தவறான அந்நியபாஷையை இனம் கண்டுகொள்ள வைப்பதும், பிஷப்மார், சபை கமிட்டிகள், ஆயர்கள், பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள், அற்புத ஊழியங்கள் செய்பவர்களின் மாய்மால சாட்சிகள் யாவையும் படம்பிடித்து காட்டி, நம்பிவிடாதீர்கள் என்று ஜாமக்காரன் வாசகர்களை ஒவ்வொரு ஜாமக்காரனிலும் இவர்களின் குறைகளை குற்றங்களை மாய்மாலங்களை சுட்டிக்காட்டி ஒவ்வொரு மாதமும் ஜாமக்காரனில் எழுதுவது எனக்கு குற்றம் சுமத்தும் ஆவி இருக்கிறது என்று இந்த பொய்யர்கள் கூறுவதை உறுதி செய்கிறது. இவர்கள் இப்படி பேசுவதாலும், எழுதுவதாலும் எனக்கு கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறுத்த முடியாதே?. என் வாசகர்களை குறித்து நான்தான் தேவனிடம் கணக்கு கொடுக்கவேண்டும். ஆகவே இவர்கள் யார் என்ன சொன்னாலும் அவைகளை ஒரு பொருட்டாக எடுக்காமல் அவர்கள்மேல் கோபப்படாமல் **ஆவியானவர் எனக்கு என்ன உணர்த்துகிறாரோ** அவைகளை அறிவிக்கவும் எச்சரித்து எழுதவும் செய்கிறேன்.

❖ 2016 மார்ச் மாதம் வாலிப பெண்களும், பெரியவர்களும்கூட **லெகின்ஸ்** போன்ற உடல் இருக்கி அணியும் ஆபாசஉடைகளை **ஜன்னல் ஜாக்கெட்டுகளைக்குறித்தும்,** தொடைக்குமேல்வரை காணும் வகையில் மலேசியா,சிங்கப்பூர் நாடுகளில் உடுத்தும் விதவிதமான ஆபாச உடைகள் எத்தனை வாலிபர், வயோதிபர் உள்ளங்களை கறைப்படுத்தி

பாவசிந்தைகளை உருக்கினது என்று ஆதாரத்துக்கு சில ஆபாச உடைகளை படம் போட்டு விளக்கினேன். உடனே வாலிப பெண்கள் குறிப்பாக கல்லூரி பெண்கள் யாவரும் **பார்ப்பவர்கள் கண்கள் சரியில்லை** என்றார்கள். டாக்டர் ஊழியம் செய்வதைவிட்டுவிட்டு எங்கள் ஆபாசத்தை ஏன் பார்க்கிறார். அவருக்கு பைபிளைக்குறித்து எழுத வேறு ஒன்றும் கிடைக்கவில்லையா? சாம் ஜெபதுரை, மோகன் சி.லாசரஸ் கூறுவதைப்போல் குறைகளை காணும் ஆவி டாக்டரிடம் உண்டு என்று கூறுவதுபோல ஆபாச உடைகளை காணும் (ஆவி) கண்கள் டாக்டருக்கு இருக்கக்கூடாது. வாலிப பெண்களின் உடை சுதந்திரத்தில் தலையிட டாக்டருக்கு உரிமையில்லை. அவர் ஊழியத்தை மட்டும் கவனித்தால் போதும். எங்களை கவனிக்கவேண்டாம் என்று ஆத்திர ஆத்திரமாக எழுதினார்கள். காரணம் அவர்களின் பெற்றோர் ஜாமக்காரனில் வந்த உடைகளைப்பற்றிய கட்டுரையை வீட்டில் தங்கள் பிள்ளைகளிடம் காட்டி எச்சரித்ததால் ஏற்பட்ட கோபம் அப்படி அவர்களை எழுதவைத்தது.

பெண்கள் கல்லூரி வாசலில் சிலர் ஜாமக்காரனில் வந்த படத்தோடு வெளியிட்ட கட்டுரையை போட்டோ காப்பி எடுத்து கிறிஸ்தவ பெண்கள் கல்லூரிகள், கிறிஸ்தவ ஆலயங்களில் விநியோகித்துள்ளார்கள்.

இயேசுவின் இரத்தம்பற்றி எழுதும்போது இந்த கன்றாவியைக்குறித்து ஏன் எழுதினேன் என்றால் வாலிப பெண்பிள்ளைகளின் மனதை வேதனைப்படுத்துவதுபோல பலர் எண்ணிக்கொண்டு **பரிசுத்தாவிக்கு டாக்டர் எதிரானவர்** என்று கூறும் ஊழியர்களைப்போல குற்றத்தை குறைகளை சுட்டிக்காட்டும்போது பெண் வர்க்கத்தையே நான் வெறுப்பதைப்போலவும், பெண்களை நான் குறை சொல்லுகிறவன் என்றும் வசைப்பாடி தொலைபேசியிலும், கடிதத்திலும் என்னை கண்டித்து எழுதி தீர்த்தார்களே அதற்காக இதை எழுதினேன்.

சரி உடையிலிருந்து இரத்தத்திற்கு வருவோம். பள்ளிக்கு போகும் பிள்ளைகளுக்கு இயேசுவின் **இரத்தம் ஜெயம்** என்று சொல்லி நெற்றியில் சிலுவை போட்டு அனுப்புவது

பரீட்சை எழுதும் போது **இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்று சொல்லி விட்டு எழுது என்று ஆலோசனை கொடுப்பதும்

சொப்பனம் கண்டு நடுஇரத்திரி அடிக்கடி எழும் சிறு பிள்ளைகளுக்குகூட **இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்று சொல்லிவிட்டு படு. பயம் நீங்கும் என்று சொல்லிக்கொடுப்பது. தடுக்கி கீழே விழுந்து எழுந்தால் **இயேசுவின் இரத்தம் ஜெயம்** சொல்வது? அவ்வளவு ஏன்? ஜலதோஷம் வந்து ஒரு தும்மல் தும்மும் போதே **இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்று சொல்வது? இதெல்லாம் என்ன?.

பெந்தேகோஸ்தே சபை விசுவாசிகள்தான் தான் உளருவது என்ன என்று விளங்கிக் கொள்ளாமல் அந்நியபாஷை பேசுகிறார்கள். ஆனால் அந்நியபாஷை பேசாத ஆழமான **நல்ல விசுவாசிகளும், பெற்றோர்களும், மிஷனரி ஊழிய வாஞ்சை** உள்ளவர்களும்கூட

இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று கூறுவது ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. வசனத்தை ஆழமாக தியானிப்பவர்கள்கூடவா அர்த்தம் புரியாமல் கண்டதிற்கெல்லாம் **இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்று சொல்வது?.

**இயேசுவின் இரத்தத்தின்** மேன்மையைக்குறித்து அறிந்துக்கொள்ளுங்கள். இயேசு சிந்திய இரத்தத்தின் நோக்கத்தை உணர்ந்துக்கொள்ளுங்கள். **இயேசுவின் இரத்தம்** என்ற வார்த்தை மந்திர வார்த்தையல்ல, இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று சொல்வதால் வியாதி சுகம் ஆகாது. இயேசுவின் இரத்தம் ஜெயம் சொல்லிவிட்டு பரீட்சை எழுதுவதால் பரீட்சை கேள்விகளுக்கு பதில்தானே மனதில்வரும். அப்படியே எழுதி பாய் செய்துவிடலாம் என்ற எண்ணத்தை பிள்ளைகளுக்கு தவறாக போதிக்காதீர்கள்.

வயிறு வலி வந்தால் இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று சொல்லி வலி உள்ள வயிற்றில் சிலுவை போட கற்றுக்கொடுக்காதீர்கள்.

## ஜெபிக்க கற்றுக்கொடுங்கள்:

குறுக்கு வழி ஆசீர்வாத்திலேயே பழக்கப்பட்ட நாம் கிறிஸ்தவ பரம்பரைக்கு இயேசுவின் இரத்தம் ஜெயமும் குருட்டு மந்திர வார்த்தையாகிப்போனது.

## இயேசுவின் இரத்தம் எப்போது அற்புதத்தை உண்டாக்கும்:

பரீட்சைக்குபோகும்முன் வீட்டில் அந்தந்த பாடங்களை ஜெபத்தோடு படித்து ஆயத்தம் செய்ய பழக்குவியுங்கள். பரீட்சை எழுதும் அறையில் **கேள்விதாள்** கொடுத்தவுடன் படித்தது ஞாபகத்தில் வர ஞாபக சக்திக்காக ஒரு சிறு ஜெபம் செய்ய கற்றுக்கொடுங்கள். அந்த ஜெபம் நிச்சயம் பயன் கொடுக்கும் பலனும் கொடுக்கும். **இயேசுவின் இரத்தம் ஜெயம்** கூறினால் எந்த பலனும் கொடுக்காது. எந்த ஆசீர்வாதமும் கிடைக்காது. எந்த சுகமும் கிடைக்காது. அந்த வார்த்தைக்கு சக்தி கிடையாது.

இயேசுவின் இரத்தத்தை புரிந்து விசுவாசித்து பாவ அறிக்கை செய்து இயேசுவின் இரத்தத்தால் விசுவாசித்தில் கழுவப்படும்போதுதான் அனைத்து ஆசீர்வாதங்களும் கிடைக்கும். இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்களின் ஜெபம் கேட்கப்படும்.

இயேசுகிறிஸ்து சிந்திய இரத்தத்தின் காரணத்தை புரிந்துக்கொண்டு, பாவ அறிக்கை செய்தால் இயேசுவின் இரத்ததால் கழுவப்படுவீர்கள்.1யோ 1:7 வசனம் இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் கழுவி சுத்திகரிக்கும்.

இரத்த கோட்டைக்குள்ளே நான் நுழைந்துவிட்டேன் என்று பாடுவதால் ஒரு பிரயோஜனமும் இல்லை. இரத்தக்கோட்டை என்றால் என்ன என்று எழுதியவருக்கே தெரியவில்லை. அந்த காலத்தில் பல கூட்டங்களில் நானே பிழையான பாடலை ஜனங்களுக்கு கற்றுக்கொடுத்தேன். எதிர்த்து நில் பிசாசு ஓடிப்போவான்.

இயேசுவின் இரத்தம் சொல்லு ஓடிப்போவான். அவன் தோற்றுப்போனவன்தானே? என்ற கோரஸ்சை பல இடத்தில் சொல்லி கொடுத்துள்ளேன். அது தவறு என்று அன்றே அப்பாட்டை பாடுவதை நிறுத்திவிட்டேன்.

**இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்ற வார்த்தையை உபயோகித்து ஏராளமான பாட்டுகள் வெளிவந்து மறைந்தன.

**சுகமளிக்கும் அற்புத கூட்டங்களில்** இந்த வார்த்தையை உபயோகிக்காத ஊழியர்களே கிடையாது எனலாம். இவர்கள் இப்படி தவறாக உபயோகிப்பது மட்டுமல்லாமல் கூட்டத்தில் ஜெபிக்கும் மக்களை **இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்று கத்தவும், கதறவும், அழுவவும் வைக்கிறார்கள். இது மிகப் பரிதாபம்.

அந்த மக்களும் அதன் அர்த்தம் விளங்காமல் **இயேசுவின் இரத்தம் ஜெயம்** என்று கூறுவதால் எந்த பிரயோஜனமும் இல்லை என்றதை உணராமல் அழுது உருள்கிறார்கள்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

# EAST KERALA CSI DIOCESE (VANDIPERIYAR) VALLAKADVU CSI CONVENTION





வண்டிபெரியார் அருகில் வள்ளக்கடவு CSI சபையின் **நற்செய்தி பெருவிழா** கூட்டம் சிறப்பாக அமைந்தது. சபையின் ஆயர்.**Rev.விஜயன்-மவுண்ட்** அவர்கள் தலைமையில் கூட்டம் மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். 3 நாட்கள் நடந்த சிறப்பு கன்வென்ஷன் கூட்டத்தில் தேவ செய்தியளித்தேன். கர்த்தருக்கே மகிமை உண்டவாதாக.

# அப்பா கட்சியா? அம்மா கட்சியா?
# மேய்ப்பன் எவ்வழி! - ஆடுகளும் அவ்வழி!



**மேடையில் தி.மு.க(DMK) அரசியல் தேர்தல் கட்சி கூட்டமேடை!.**

இந்த படத்தில் விசேஷம் என்னவென்றால் கிறிஸ்தவ போதகர் நாலுமாவடி **மோகன்.சி.லாசரஸ்** அவர்கள் திரு.ஸ்டாலின் அருகே நிற்கிறார். **ECI பிஷப். எஸ்றா சற்குணம்** அவர்களுக்கு DMK கட்சி மேடை புதிதல்ல. **கிறிஸ்துவுக்கு தூதுவராக** இருக்க வேண்டியவர். DMK அரசியல் கட்சி தலைவர் கலைஞர்.**கருணாநிதி** சார்பிலும், மகன் திரு.**ஸ்டாலின்** சார்பிலும்,நடிகரும், தே.தி.மு.க கட்சி தலைவருமான நடிகர்.**விஜயகாந்த்** அவர்களை DMK கூட்டணியில் சேர்க்க பலமுறை திமுக கட்சி தூதுவராக விஜயகாந்த் வீட்டுக்கும்,கட்சி அலுவலகத்துக்கும், ஸ்டார் ஓட்டலுக்கும் பலமுறை சென்று பேசினார். விஜயகாந்த் அவர்கள் பிஷப்.**எஸ்றா சற்குணம்** அவர்களுக்கும் மரியாதை கொடுக்கவில்லை- அவரின் **பிஷப்** அங்கிக்கும் மரியாதை கொடுக்கவில்லை. அவர் வழக்கமாக அணியும் **சிலுவைக்கும்** மரியாதை கொடுக்கவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் விஜயகாந்தின் வழக்கமான கோப வார்த்தைகளை சுமந்துக்கொண்டு கலைஞரிடம் வந்துவிழுந்தார் என்று கூற கேட்டேன்.

**கடவுளே இல்லை** என்ற கொள்கை கொண்ட **பெரியார்** அவர்களின் சீடர்களின் கூட்டத்தில் **நாலுமாவடியாருக்கு** என்ன வேலை? கட்சிக்காரர்கள் ஒருவரை ஒருவர் பண விஷயத்தில் சாடுவதைப்போல இவர் பணம் எவ்வளவு வாங்கியிருப்பார்? **காணிக்கை** என்ற பெயரில் நகை கடை முதலாளி தன் கடை திறப்புவிழாவுக்கு **நாலுமாவடியாருக்கு** கொடுத்த

தொகை எவ்வளவு? என்பதைக்குறித்து மக்கள் கூறும் கதைகளைக்கேட்டால் இவர்கள் ஊழியம் எத்தனை பெரிய வியாபாரமாக மாறிப்போனது? அவர் மேடையில் நிற்கும்போது கையில் வைத்துள்ள **சிப் பேக்கில்** உதயசூரியனுக்கு ஒட்டு என்ற துண்டுபிரதிகள் இருந்திருக்குமா? அல்லது பணமா? இவர் ஆவியிலே நிறைந்து **அந்நியபாஷை** பேசி ஆழமாக ஜெபம் செய்து DMK ஜெயிக்கவேண்டும். கலைஞரின் குடும்பம் செழிக்கவேண்டும்,பிள்ளைகள்,பிள்ளைகளின் பிள்ளைகள் தலைமுறை தலைமுறையாக ஆட்சி செய்யவேண்டும் என்று இவர் ஜெபித்தால்தானே **கட்சிக்காரர்களின் அன்பை** இவர் பெறமுடியும். நாலுமாவடி **திறப்பின் வாசல்** என்ற மண்டபம் சீக்கிரத்தில் தமிழ்நாடு DMK மாநாடு நடத்த பெரும் தொகைக்கு வாடகைக்கு கொடுக்கும் நிலை வெகுதூரத்தில் இல்லை என்று பேசப்படுவது உண்மையாகுமா?.

## அடுத்து நக்மா உடன் நாலுமாவடி:

நாலுமாவடி திறப்பின் வாசல் உபவாச ஜெபகூட்டத்தில் சினிமா கவர்ச்சி நடிகை நக்மாவின் சாட்சி வாசகர்கள் CDஐ கேட்டீர்கள், நடிகை **நக்மா** ஜெபித்து பலர் சுகம் பெற்றார்கள் என்று மோகன் சி.லாசரஸ் அவர்களே அந்த CDயில் பேசியிருப்பதையும் கேட்டீர்கள். இப்போது **நக்மா,** இயேசுவை விட்டுவிட்டு அதிக லாபம் கிடைக்க நடிகை **குஷ்புக்கு** போட்டியாக அரசியல் கட்சியில் இணைந்துவிட்டார். சீக்கிரத்தில் நாலுமாவடி மோகன் சி.லாசரஸ் திறப்பின் வாசலில் **உபவாச கூட்டத்துக்கு** நடிகை நக்மா மறுபடியும் வரலாம். தன் கட்சிக்கு ஓட்டுபோடுங்கள் என்று நக்மா கேட்கலாம். அரசியலில் எதுவும் நடக்கும். என்னதான் சகோ.மோகன் சி.லாசரஸ் **திமுக** தேர்தல் மேடையில் **புகைப்படகாரருக்கு முகத்தை காட்டாமல்** வேறு பக்கம் முகத்தை திருப்பிக்கொண்டாலும் கட்சி தலைவர்களுடன் முழு தோற்றத்துடன் அதுவும் திரு.**ஸ்டாலின்** அருகே நிற்கும் பாக்கியத்தை,ஆசீர்வாதத்தை யாரால் தடுக்கமுடியும்.

ஆக, **நாலுமாவடிக்கு** மாதந்தோறும் நடக்கும் உபவாச ஜெபத்துக்குபோகும் கன்னியாகுமரி,திருநெல்வேலி மாவட்ட கிறிஸ்தவ CSI விசுவாசிகள், பிஷப்மார்கள், கோயமுத்தூரில் இவருக்கு ஒரு கூட்டம் உண்டு. இவர்களின் ஓட்டுகள் எல்லாம் நிச்சயம் உதயசூரியனுக்கு தான் என்று கூறலாமா?.

❖ **நானும்(Dr.புஷ்பராஜ்)** ஒரு காலத்தில் **அறிஞர்.அண்ணா** அவர்களின் பின்னே போனவன்தான்).

❖ **ஆவிக்குரியவர்கள், ஆவிக்குரியவர்களோடுதான்** இணைவார்கள். ஆனால் இன்றைய ஸ்டார் கிறிஸ்தவ ஊழியர்கள் மக்களை எங்கு அழைத்து போகிறார்கள்? இவர்களை பின்பற்றுபவர்களுக்கும் இவர்களுக்கு காணிக்கை அளிப்பவர்களுக்கும் மோகன் சி.லாசரஸ் காட்டும் அரசியல்வழி ஆபத்தானது. உண்மையானவர்கள் யாரும் அரசியலில் இருக்கமுடியாது.

மோகன் சி.லாசரஸ் ஜெபத்தில் மக்களின் பெயர் அழைப்பதும் பொய்!.

மக்களின் **வியாதிகளைப்பற்றி** ஜெபத்தில் கூறும் வெளிப்பாடும் பொய்!.

**எயிட்ஸ்,சர்க்கரை** வியாதிகள் இவர் கூட்டத்தில் சுகமானது என்பதும் பொய்!

இவைகளை இப்போதவது கிறிஸ்தவ உலகம் விளங்கிக்கொண்டால் நல்லது.

❖ பழைய ஏற்பாட்டில் கர்த்தர் விரும்பாத இடத்துக்கு செல்லாதே என்றும் கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்காதே என்று ஒரு தீர்க்கதரிசியிடம் கர்த்தர் கூறியும் எச்சரித்தும் **அந்த தீர்க்கதரிசி கர்த்தருக்கு பிடிக்காத** இடத்துக்கு கழுதைமேல் ஏறி சென்ற விவரம் வாசகர்கள் அறிவீர்கள். கர்த்தருக்கு கீழ்ப்படியாத அந்த **கிழ தீர்க்கதரிசிக்கு இவருக்கும்** கொஞ்சம்கூட வித்தியாசம் இல்லையே!.

**பாவிகள் வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில், உட்காராமாலும் இருப்பவனே பாக்கியவான்.** சங் 1:1 என்ற வசனத்தை யாராவது மோகன் சி.லாசரஸ் அவர்களுக்கு ஞாபகப்படுத்துங்கள்.

**நாலுமாவடிக்கு வை.கோ. வந்தார், நக்மா வந்தார்.**

ஒரு சினிமா டைரக்டரின் புது படம் வெளியிட்டு விழாவில் சென்று ஜெபித்து அந்த சினிமா வெற்றிடைய ஜெபித்தார். உடனே இவரும் **சினிமா** தயாரிப்பாளரானர். பைனான்சியரானர். **சிங்கப்பூர்** சென்று ஒரு சினிமா படம் எடுத்து **இயேசு விடுவிக்கிறார்** சினிமா வெளியிடும் கம்பெனி ஒன்றை தொடங்கி அந்த புது சினிமாவை ஜெபித்து வெளியிட்டார்கள். **சினிமா பாஷையில்** கூறவேண்டுமென்றால் இவர் எடுத்த அந்த சினிமா படம் ஊற்றிக்கொண்டது என்று விமர்சனம் வந்துவிட்டது.

இப்போது **அரசியல் மேடையில் அரசியல்வாதிகளுடன் நின்ற இவர் நாளை கிறிஸ்த அரசியல்வாதியும்,அரசியல் கட்சி தலைவரும்,MLA ஆகவும் மாறமாட்டார்** என்பது என்ன நிச்சியம்?. **இவரை பின்பற்றுபவர்கள் - இவர் போகும் வழி போகாதீர்கள்.**

# அடுத்தது - அம்மா கட்சி:



**இந்த படத்திலும் கிறிஸ்த ஆயர்களின் கூட்டம்:**

**சிஸ்வா பிரகாஷ்** - பிஷப்.பிரகாஷ் அவர்கள் எப்போதோ அம்மா கட்சியில் அதிமுகவில் சேர்ந்தவுடன் பதவி பரிசாக கிடைத்தது ஒரு பதவி. சிறுபான்மை இன கிறிஸ்தவ மக்களின் பிரதிநிதியாக பிஷப்.பிரகாஷ்க்கு பதவி கிடைத்தது. அதோடு சில கோடிகளும் கொடுக்கப்பட்டது. **இஸ்ரேல்**(எருசலேம்)போக ஆசைப்படும் தமிழ்நாட்டு ஏழை கிறிஸ்தவர்கள் எருசலேம் புனித ஸ்தலத்துக்கு போய்வர இவரிடம் பொறுப்பு கொடுக்கப்பட்டது. கோடி கணக்கில் ஊழல் என்று அம்மாவுக்கு தகவல் வந்தது. உடனே அம்மா தரிசனம் கிடைக்காமல் பல மாதங்கள் ஓரம் கட்டப்பட்டார். பிஷப்.எஸ்றா சற்குணம் திமுகவில் இருப்பதால் மற்ற கிறிஸ்தவர்களை பிடிக்க தன் கட்சிக்கு ஒரு **அங்கி போட்டவரின் காட்சி** தேவை. ஆகவே மறுபடியும் புகைப்படத்துக்காக மற்ற ஆயர்களையும் தன்கூட அழைத்து நிற்க வைக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. **இயேசுவின் சீஷன் - இப்போது அம்மாவின் சீஷன் ஆனார்.**

இதுதான் இன்றைய **கிறிஸ்தவ பிஷப்மார்,சுமளிக்கும் கூட்டம் நடத்தும் ஸ்டார் ஊழியர்கள் ஆயர்களின் நிலை ஆகும்.** இப்போது உங்கள் ஓட்டு யாருக்கு?. ❖❖❖❖❖❖

# KALVARAYAN MALAI CHRISTIAN FELLOWSHIP




மிஷனரி **பிரான்ட்** அம்மையாரின் மிஷனரி ஊழியத்தில் கொல்லிமலைக்கு அடுத்ததாக அம்மையார் தெரிந்தெடுத்த மலைதான் **கல்வராயன் மலை. Rev.எலியாஸ்**(கன்னியாகுமரி CSI திருமண்டலம்) அவர்களின் மகத்தான மிஷனரி ஊழியம் இம்மலை தொடங்கி ஆயிரக்காணக்காக கிராம மக்கள் இயேசு ஏற்றுக்கொண்டனர். இன்று பல சபைகள் அங்கு எழும்பியுள்ளன. Rev.எலியாஸ் அவர்களுக்கு பிறகு பல மிஷனரிகள்,ஆயர்கள் கன்னியாகுமரியிலிருந்து வந்து சிறப்பாக ஊழியம் நிறைவேற்றி சபைகள் எழுந்தது. இந்த மலையிலுள்ள பல சபை ஊழியர்களும்,DBM மிஷனரிகளுடன் இணைந்து வருடாவருடம் பொதுமைதானத்தில் ஆவிக்குரிய கூட்டம் நடத்துவார்கள். அந்த வகையில் 3ம் முறையாக நான் இப்பகுதியில் ஊழியத்துக்காக வந்து இந்த கூட்டங்களில் செய்தி கொடுத்தேன். ஊழியர் ஐக்கியத்தினர் மிக சிறப்பாக கூட்டங்களில் பல கிராமங்களிலிருந்து மக்கள் வந்துபோக பஸ்களையும்,வேன்களையும்,ஜீப்களையுயும் ஏற்பாடு செய்து மக்களுக்கு உணவு அளித்து சிறப்பான ஏற்பாடுகள் செய்திருந்தனர். தேவ நாமம் மகிமைப்பட்டது.



# திருமணங்களில் ரொக்கம் வாங்கலாமா?



**ஆர்.ஸ்டான்லி**

மணமகனின் பெற்றோர் மணமகள் வீட்டாரிடமிருந்து பெருந்தொகைகளை நிபந்தனையாக வாங்கும் பழக்கமானது நியாயமான குடிமகன் எவனும், உத்தமக் கிறிஸ்தவன் எவனும் எதிர்க்கவேண்டிய சமூகத் தீங்காகும். ரொக்கத்திற்கெதிரான அரசியல் சட்டம் அமுலாக்கப்பட்டும், இன்னும் இக்கலாச்சாரம் ஒழிந்தபாடில்லை. கணவன்மாரும் அவர் தம் வீட்டாரும் பணம் பணம் என்று படுத்தும்பாடுகளைத் தாங்கமுடியாது. தங்களைத் தீக்கொளுத்திக்கொள்ளும் பெண்களைப்பற்றிய செய்திகள் பத்திரிக்கைகளில் நிறையவுண்டு. இம்முக்கியமான காரியத்திற்குக் கிறிஸ்தவர்களின் பதிலென்ன?.

அக்காலத்து மத்திய கிழக்கு நாடுகளில் மணமகளின் தகப்பனாருக்கு மருமகன் ஒரு பரிசம் கொடுக்கவேண்டும்(ஆதி 34:12). ரொக்கம் என்ற சொல் இவ்விதம் முதலாவது பெண்ணின் விலை என்றே பொருள்பட்டது. இன்றோ அது மாப்பிள்ளையின் விலையாகிவிட்டது. பெண்ணிற்கான தொகை எப்பொழுதுமே பணமாய்தான் கொடுக்கப்பட்டதென்றில்லை.

லாபானின் மகள் ராகேலை மணமுடிக்க யாக்கோபு அவனிடம் ஏழாண்டு வேலை செய்தான்(ஆதி 29:18). தாவீது நூறு பெலிஸ்தியரைக் கொன்றுவிட்டான் என்ற நிரூபணம் தவிர தனது மகளை மணக்க தாவீது வேறே பரிசம் எதுவும் தரவேண்டியதில்லையெனச் சவுல் கூறினான்.(1சாமு 18:25). பெண்ணின் தகப்பனும் அவளுக்கு வெகுமதிகள் கொடுத்தான்.(ஆதி 29:24,29). காலேப் தனது மகளுக்கு வயலையும் நீரூற்றுகளையும் கொடுத்தான்(யோசு 15:24:53). கிறிஸ்து தமது மணவாட்டியாகிய சபையை நேசித்து அவளுக்குத் தம்மையே கொடுத்துவிட்டார்(எபே 5:25). கிறிஸ்துவாகிய மணவாளனை நமக்குத் தந்துவிட்ட தந்தையாகிய தேவன், நன்மையான வேறெதையும் நமக்கு மறுப்பதில்லை(ரோ 8:32).

மணமுடிப்பில் பணப்பேச்சு பெரிதாயிருக்குமானால் எல்லா வகைத் தீங்குகளும் உள்ளே நுழைந்துவிடும். **காசேதான் கடவுளடா** எனும் உலகப் போக்கிற்குக் கிறிஸ்தவத் திருமணங்களில் இடமேயிருக்கக்கூடாது. திருமணச் சந்தையில் பெற்றோரது வற்புறுத்தலுக்குப் பலியான கிறிஸ்தவ வாலிபர் பலருக்கு நிறையப் பொன் கிடைத்துவிட்டது. ஆனால் நல்ல பெண் கிடைக்கவில்லை. பணமோ,மணமோ அல்ல, குணமே நிலைக்கும்(நீதி 31:30). பெற்றோருக்குமேல் பிடிவாதமாயிருக்க வாலிபருக்கு முதுகெலும்பு தேவை. பெற்றோர் மேலேயே எல்லாப் பழியையும் சுமத்துவது ஆண்மையல்ல.

சில வட்டாரங்களில் பெற்றோரின் சொத்தில் பெரும்பகுதி மகன்களுக்கே கொடுக்கப்படுகிறது. மகள்கள் மாற்றாந்தாய்ப் பிள்ளைகள் போலவே நடத்தப்படுகின்றனர். இதுவும் தேவத்தத்துவங்களுக்கும் சமவுரிமைச் சட்டத்திற்கும் எதிரானது. மகன்களையும்,மகள்களையும் பெற்றோர் ஒன்றுபோல் நடத்துவார்களெனில், ரொக்க ஒழிப்பு தீவிரமடையும்.

எனது மனைவியும் நானும் ரொக்கம் கொடுக்கல் வாங்கல் பழக்கத்திற்கு எதிரானவர்கள், எங்கள் திருமணம் இதற்கொரு சாட்சியாயிருக்கவேண்டுமென விரும்பினோம். ஆனால் நான் படிப்பை முடித்த அதே மாதத்தில் அவளை எனக்குப் பேசினார்கள். அரசின் கல்வியுதவிக் கடன் திட்டத்தில் நான் படித்து முடித்திருந்தேன். பெற்றோரிடம் சேமிப்பு என்று எதுவும் கிடையாது. எனவே, கொஞ்சக் காலம் பொறுத்திருக்க முடியுமா? அவன் இன்னும் வேலையிலேயே சேரவில்லை. அவனுக்குக் கல்யாண சூட் தைக்கவே காசில்லையே என எனது தந்தை அவளது பெற்றோரிடம் கூறினார். அதற்கு அவள் தந்தை எங்களுக்குத் தேவை உங்கள் மகன்தானே ஒழிய, வேலையல்ல என்றார். திருமணச் செலவுகளுக்காய் ரூ.20,000/ என் தந்தையிடம் முன்வந்து கொடுத்தார்.

பொறியியலில் முதல் மதிப்பெண்களுடன் முதுநிலைப்பட்டம் பெற்ற ஒருவனுக்குப் பல இலட்சங்கள் கொடுக்க பலர் காத்திருந்த அந்நாட்களில் இச்சிறு தொகையில் திருப்தியடைந்த என் பெற்றோருக்காய்த் தேவனைத்துதிக்கிறேன். ஆனாலும் இந்தக் காரியம் எனக்குப் பிடிக்கவில்லை. திருமணம் முடிந்ததும் எனது மாமனாரிடம் நான் வேலைப் பார்த்துச் சேமித்து அப்பணத்தைத் திருப்பிக்கொடுத்துவிடுகிறேன் என்றேன். அவரோ, அத்தொகை பெரியதுமல்ல, வற்புறுத்திக் கேட்கப்பட்ட ரொக்கமுமல்ல. திருமணச் செலவுகளுக்காய் இதற்கும் குறைவாய் உங்கள் பெற்றோருக்கு நான் உதவியிருக்க முடியாது. நீங்கள் ஒன்றும் நினைக்காமல் சுத்த மனசாட்சியோடு செல்லலாம் என்று பதிலுரைத்தார்.

லேமென்ஸ் இவாஞ்சலிக்கல் பெல்லோஷிப்பை நிறுவிய சகோதரன் என்.டேனியல் அவர்கள் 1950ம் ஆண்டுகளில் தனது மனந்திரும்புதலின் செய்திகளில் ரொக்கம் கொடுக்கல் வாங்கலை வெகுவாய்க் கண்டித்தார். அதற்குப் பிரதிபலனாகக் கணவன்மார் பலர் தேவனோடும் மனிதரோடும் ஒப்புரவாகும்படித் தங்கள் மாமனார்களுக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். அல்லது காரியத்தைச் சரிசெய்துவிட்டார்கள். இன்றையப் பிரசங்க பீடங்களிலோ சமூகத் தீங்குள் கண்டிக்கப்படுவதேயில்லை. மாறாக, அதிலும் தங்களுக்குப் பத்திலொன்று கிடைக்கும்படி ரொக்கப் பணத்தை ஜெபித்து ஆசீர்வதிக்கும் சபை மேய்ப்பார்கள் உண்டு வெட்கம்.

இதுதான் வழக்கம் என்று நிற்காது, வசதியுள்ள குடும்பம் அடுத்த குடும்பத்திற்கு உதவி திருமணத்தைச் சிறப்பாய் நடத்தச் செய்யவேண்டும். எளிய குடும்பத்தைக் கடனுக்குள்ளாக்குவது கிறிஸ்தவ மரபன்று. பூமிக்கு உப்பாகிய கிறிஸ்தவர்கள் முன்மாதிரிகளாயிராவிடில் வேறு யார்தான் சமுதாயத்தைச் சீர்ப்படுத்தமுடியும்?..

**ஏமாறாதே!** **ஏமாற்றாதே!!**

# ஏஞ்சல் டிவியின் பொய் தீர்க்கதரிசனம்:

சகோ.சாது சுந்தர்செல்வராஜ் அவர்கள் புத்தாண்டு ஆசீர்வாத கடிதம் என்று தனக்கு உதவி செய்பவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் 2015 நவம்பர், டிசம்பர் மாதங்களை நம்மால் மறக்க முடியாத இரு மாதங்களாகும். அளவுக்கு அதிகமான மழை காரணமாக சென்னை மற்றும் கடலூர் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியது. நம் நினைவில் இன்றும் பசுமையாக இருக்கிறது.



உங்கள் வீட்டுபிள்ளை ஏஞ்சல் டிவி ஸ்டுடியோ இவ்வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுவிட்டது. இது எனக்கு அதிக மன உளைச்சலை உண்டாக்கியது. இது சாது சுந்தர்செல்வராஜ் அவர்களின் கடிதம்.

## நம் கேள்வி என்ன?

' ஏஞ்சல் டிவி மூலம் முழு உலகத்துக்கும் வெள்ள அழிவை கர்த்தர் காட்டினார் என்று சகோ.சாதுசெல்வராஜ், சகோ.வின்சென்ட்செல்வகுமார், சகோ.மோகன் சி.லாசரஸ் போன்ற பல கள்ளதீர்க்கதரிசிகள் வயிற்றில் கர்ப்பத்தில் உள்ள குழந்தைகள் எல்லாம் தீர்க்கதரிசனம் கூறும் என்று பொய் சொன்னவர்களுக்கு சென்னை மழையை இவர்களின் மற்றொரு இயேசு ஏன் வெளிப்படுத்தவில்லை. வெளிப்படுத்தியிருந்தால் சென்னை வாழ் மக்களையும் காப்பாற்றி, ஏஞ்சல் டிவியையும் காப்பாற்றியிருக்காலமே!.



**ஊருக்கெல்லாம் குறி சொல்லும் பல்லி**

**கழனி பானையில் விழுந்து செத்த கதையாகிபோனது.**

இதை ஏன் சாதுசுந்தர் செல்வராஜ் கூறுகிறார் என்றால் தங்கள் விசிறிகளிடம் புது திட்டத்துக்கு பணம் கறக்கத்தான்.

ஒரு பிரகாசமான தூதன் கையில் சுருளோடு என்முன் தோன்றி கட்டிட பொறியாளர் வரைபடம் காட்டினார். நான் இது என்ன? என்றேன். இதுதான் ஏஞ்சல் டிவியின் தலைமையக கட்டிடம். மறுபடியும் தூதன்தோன்றி கட்டிட சுவர்களின் நிறங்கள், கோபுரங்கள், தூண்கள் போன்ற திட்டங்களை துல்லியமாக காட்டினார். இதற்கு பணம் நீங்கள்தான் கொடுக்கவேண்டும்.

சகோ.தினகரன் அவர்கள் அன்றைக்கு கூறிய அதே மாதிரியான பொய், தூதர்கள் காருண்யா வரைபடத்தை காட்டி இதைப்போல் கட்டு என்று கூறியதாக அவர் சொன்னார்..

இந்த கள்ளதீர்க்கதரிசி சகோ.தினகரன் பாணியை பின்பற்றி எனக்கும் தூதன் வரைபடத்தை காட்டி தலைமையகத்தை கட்ட சொன்னார் என்கிறார். இவர்கள் பயங்கர வியாபாரிகள்! ஜாக்கிறதை! ஏமார்ந்துவிடாதீர்கள்.

# COIMBATORE CSI DIOCESE
# ELATHAGIRI CSI CHURCH CONVENTION




**Rev.V.K.சுரேஷ்குமார்**(சபை ஆயர்) தலைமையில் நடந்த இக்கூட்டங்களில் தேவ ஆவியானவர் என்னை மிகச்சிறப்பாக வசனங்கள் கூறி உபயோகித்தார். ஆனால் கேட்ட செய்திகள் எந்த அளவு சபை மக்களுக்கு பிரயோஜனப்பட்டது என்பதை இவர்களின் சாட்சி மூலம்தான் வெளிப்படும். இந்த சபைக்காக விசேஷமாக ஜெபிப்போம்.

**எலத்தகிரி** ஊர் முழுவதும் கிறிஸ்தவர்கள்தான் குடியிருக்கிறார்கள். மற்ற மதத்தினர் யாரும் குடியிருப்பதாக தெரியவில்லை. ஆனால் ஏராளமான கத்தோலிக்க ஆலயங்கள், CSI சபை கட்டிடத்தை சுற்றிலும் காணப்படுகிறது. மற்றவர்களுக்கு முன் மாதிரியாக ஜீவித்து கத்தோலிக்கர்களும் CSI சபையை தேடி வரவேண்டுமானால் சபை விசுவாசிகள் தங்கள் சாட்சியை காண்பிக்கவேண்டியது மிக முக்கியம்.

சுமார் 30 ஆண்டுகளுக்குமுன் நான் இங்கு பிரசிங்கித்தபோது மரியாள் இறந்துபோனவர்- இயேசுகிறிஸ்து உயிரோடு இருக்கிறவர். உயிரோடு இருக்கிறவர்தான் நம் ஜெபத்தை கேட்கமுடியும்.

செத்துப்போன மரியாளோ -அந்தோணியாரோ பேதுருவே நம் ஜெபத்தை கேட்கவும்முடியாது- நம் ஜெபத்துக்கு பதில் கொடுக்கவும் முடியாது என்று பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போதே பெரிய கல்லுகள் பழைய ஆலய கூறை மீது விழுந்து கூறை உடைந்து கல்லும் உள்ளே விழுந்தது.

இந்த சாட்சியை மறக்காமல் அந்த சபையின் மூத்த அங்கத்தினரான சகோதரி சாட்சி கூறி என்னோடு இணைந்து தேவனை துதித்தார். கர்த்தருக்கே மகிமை உண்டவதாக.

**E - M A I L**

**E-Mail அனுப்புபவர்கள் தயவுசெய்து உங்கள் பெயர்- முழுவிலாசம், தொலைப்பேசி எண், கம்பியூட்டர் எண் ஆகியவைகளையும் குறிப்பிடுங்கள்.**

## எச்சரிக்கை!

‘ அந்நியபாஷை என்பது பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு அடையாளம் அல்ல-அது வரம் என்று வேதபுத்தகம் கூறுகிறது. இதை தெளிவாக அறிந்திருந்தும் அந்நியபாஷையை பேசும்படி வற்புறுத்தும் எந்த பாஸ்டரும், எந்த ஊழியரும் தேவ கோபத்துக்குள்ளாவர்கள்.

எச்சரிக்கை வசனம் : மாற்கு 3:29 (கத்தோலிக்க வேத மொழிபெயர்ப்பு)

‘ இயேசுகிறிஸ்து கூறினார். "உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன்: மக்களுக்கு எல்லாம் மன்னிக்கப்படும். பாவங்களும் அவர்கள் சொல்லும் தெய்வ நிந்தனைகளும்கூட மன்னிக்கப்படும். ஆனால் பரிசுத்த ஆவியை நிந்திப்பவன்(பிழையான அர்த்தம் கொள்ளும்படி உபதேசிப்பவன்) எவனும் ஒருபோதும் மன்னிப்புப்பெறான், என்றென்றும் தீராதபாவத்திற்கு ஆளானவான்".

‘ இந்த வசன எச்சரிக்கைஅந்நியபாஷை பேச படிப்பிக்கிற சகல பெந்தேகோஸ்தே பாஸ்டர்களுக்கும்- ஊழியர்களுக்கும் பொருந்தும் - அப்படியே இதை எழுதுகிற டாக்டர்.புஷ்பராஜ்ஆகிய நான் அந்நியபாஷையைக் குறித்து பிழையாக வியாக்கியானித்திருந்தால் இந்த எச்சரிக்கையும் -தண்டனையும் எனக்கும் பொருந்தும்.

**MAY 2016**

# Printed Book/Book Post

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.